வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 18.03.2024 திங்கட்கிழமை இதழ் : 78 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# போரால் பாதிக்கப்பட்டவர்களை சந்திக்கின்றது நல்லிணக்க குழு!

## இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கத் திட்டம்

**கொழும்பு, மார்ச் 18**

**வடக்கு - கிழக்கில் போரால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுடனான ஒழுங்கமைக்கப்பட்ட சந்திப்புகள் இந்த மாத இறுதியிலிருந்து ஆரம்பமாகும் என்று உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகத்தின் கொள்கை பிரிவுத் தலைவர் யுவி. தங்கராஜா தெரிவித்துள்ளார்.**

நாட்டில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவும் பணியை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. இந்த நிலையில், அதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் விதமாக கலாநிதி அசங்க குணவன்ஸ தலைமையில் இயங்கிவரும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகம் அண்மையில் வட, கிழக்கு மாகாணங்களுக்கு வந்து பல தரப்பினரையும் சந்தித்துப் பேசியது.

எனினும், இந்த சந்திப்புகளில், வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், போரால் விதவைகளானோர், முன்னாள் போராளிகள் எனப் போரால் நேரடியாக பாதிக்கப்பட்ட எவரையும் சந்திக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது. இது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்ட போதே யுவி தங்கராஜா மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "அண்மையில் தமது செயலக

11

## மனித மேம்பாட்டு தராதரம்:

# தெற்காசிய நாடுகளிலேயே இலங்கை 'உயர்' மட்டத்தில்!

### ஐ. நா. அபிவிருத்தி திட்டம் அறிக்கை

*கொழும்பு, மார்ச் 18*

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயல் திட்டத்தின் புதிய ஆய்வறிக்கையின்படி, தெற்காசிய பிராந்தியத்தில் மனித மேம்பாட்டு தராதரத்தில் உயர்வான மட்டத்தைப் பேணும் நாடாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தில் அண்மைக்காலமாக நிலவும் பலதரப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் மனித மேம்பாட்டை முன்னிலைப்படுத்திய இலங்கையின் தொடர் முயற்சிகள், நாட்டு மக்களின் நலன் மற்றும் முன்னேற்றத்துக்கு முன்னுரிமை அளிப்பதில் இலங்கை கொண்டிருக்கும் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை காண்பிப்பதாக பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

11

# விளையாட்டு போட்டிகளை ஒத்திவைக்குமாறு அறிவிப்பு

### கல்வி அமைச்சு விடுத்தது

*கொழும்பு, மார்ச் 18*

அதிக வெப்பநிலை நிலவுவதால் விளையாட்டுப் போட்டிகளை ஒத்திவைக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாடசாலை அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடும் வெப்பநிலையால் பிள்ளைகளின் பாதுகாப்பு கருதியே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேநேரம், கடந்த சில வாரங்களாக நாட்டின்

11



# காணாமல்போன மீனவர் சடலமாக நேற்று மீட்பு!

*வடமராட்சி, மார்ச் 18*

மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணியை சேர்ந்த முத்துச்சாமி தவராசா (வயது 60) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட மீனவராவார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அவர் வழக்கம் போன்று மீன்பிடிக்க கடலுக்கு தெப்பத்தில் சென்றுள்ளார். பின்னர், அவர் காணாமல் போயிருந்தார். அவரை கடற்படையினரும் மீனவர்களும் கடந்த இரு நாட்களாக தேடி வந்தனர்.

இந்த நிலையில் நேற்று மாலை 6 மணியளவில் தாளையடி கரையோரத்தில் அவரின் சடலம் கண்டுபிடிக்கப் பட்டது.

(ஐ-2)

# இளம் குடும்பஸ்தர் கொலை; ஆறாவது சந்தேகநபர் கைது!

*யாழ்ப்பாணம், மார்ச் 18*

இளம் குடும்பஸ்தர் கடத்தப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட வழக்கில் ஆறாவது சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டார்.

சித்தங்கேணியை சேர்ந்த இந்த சந்தேகநபரை யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் கீரிமலை பகுதியில் வைத்து கைது செய்தனர். சந்தேகநபரிடம் இருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 11ஆம் திகதி இரவு காரைநகரிலிருந்து மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் திரும்பியவரை பொன்னாலை கடற்படை முகாம் முன்பாக குழு ஒன்று கடத்தியது. இதற்கு கடற்படையும் உதவியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கணவனும் மனைவியும் தனித்தனி வாகனங்களில் கடத்தப்பட்ட

11

# திடீரென்று வீழ்ந்து பெண் உயிரிழப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 18*

சுழிபுரத்தில் பெண் ஒருவர் திடீரென வீழ்ந்து உயிரிழந்தார்.

சுழிபுரம் - தொல்புரம் கிழக்கு - சிவபூமி வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இராசேந்திரம் செல்வநிதி (வயத 49) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண்ணின் கணவர் மதுபோதையில் வந்தார் என்றும் இருவரும் தர்க்கத்தில் ஈடுபட்டனர் எனவும் கூறப்படுகின்றது. இதைத்

11

# இராணுவ உயர் பிரதிநிதிகளை இலங்கைக்கு அனுப்பியது சீனா!

*கொழும்பு, மார்ச் 18*

தெற்காசிய நாடுகளுடனான பாதுகாப்பு விவகாரங்களில் மேலும் ஒத்துழைப்புகளை விரிவுபடுத்தி வருகிறது சீனா. இதற்காக தனது இராணுவத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளை இலங்கை, மாலைதீவு நேபாளத்துக்கு அந்த நாடு அனுப்பி வைத்துள்ளது.

சீனாவின் இந்த நடவடிக்கை தெற்காசியாவில் சீன மூலோபாய போட்டியாளரை எதிர்கொள்வதற்கான உந்துதலின் முக்கியமான

11

# ஐ. தே. கட்சியின் கூட்டணியில் பெரமுனவின் அதிருப்தி குழு!

### மே நாளில் அறிவிக்கப்படும்

*கொழும்பு, மார்ச் 18*

ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான தேர்தல் கூட்டணியில், சிறீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறிய அநுர பிரிதயதர்ஷன யாப்பா தலைமையிலான குழு இணையவுள்ளது.

அதிருப்தி குழு எதிர்வரும் மே தினத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டணியில் இணையும்.

இதேநேரம், கூட்டணியின் பெயர் மற்றும் சின்னம் என்பவற்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற அரசியல் அமைச்சரவை கூட்டத்தில், உத்தேச ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்திய செயலாற்றுகை குழுவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

11

# ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் 1500 பக்கங்களை அரசு மறைத்துவிட்டது

### கர்தினால் மல்கம் ரஞ்சித் சாடல்

*கொழும்பு, மார்ச் 18*

திருச்சபைக்கு அரசாங்கம் வழங்கிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் முக்கியமான 1500 பக்கங்கள் காணப்படவில்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஆறு இறுவட்டுகளில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை வழங்கியது. நாங்களும் சட்டத்தரணிகளும் அதனை ஆராய்ந்தோம் 70 ஆயிரம் பக்கங்கள் உள்ளன. எனினும், அரசாங்கம் 1500 பக்கங்களை எங்களுக்கு வழங்கவில்லை.

சஹ்ரான் ஹாசிமின் மனைவி, தற்கொலை தாக்குதலில் ஈடுபட்ட குழுவினருடன் நெருங்கிய தொடர்பிலிருந்தவர் எனக் கூறப்படும் சாரா ஜஸ்மின் போன்றவர்கள்

11

## இப்படியும் நடக்கிறது

வவுனியா - வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தன்று நீதிமன்ற அனுமதியுடன் வழிபாடுகளுக்குச் சென்ற ஆலய பூசகரும் மற்றும் ஏழு பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பத்து நாட்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் கைதுசெய்யப்பட்டபோது, அங்கே இருந்த யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளருமான செ. கஜேந்திரன் பொலிஸாரால் துன்புறுத்தப்பட்டார் என்றும் அவரை குண்டுக்கட்டாக பொலிஸார் தூக்கிச்சென்றனரெனவும் அன்றைய தினம் செய்திகள் வெளிவந்திருந்தன.

பொலிஸார் கைது செய்கின்றபோது ஒருவரை வலுக்கட்டாயமாகத் தூக்கிச் செல்கின்றனர் என்றால், அது அவர் கைது செய்யப்படும்போது அதற்கு எதிராக இருந்திருந்தால் மட்டுமே அப்படி தூக்கிச்செல்ல வேண்டியேற்படும். தன்னை பொலிஸார் காரணம் எதுவுமின்றி கைதுசெய்யும்போது, அவர்கள் கைதுசெய்வதைத் தடுக்காமல் இருந்திருந்தால் - அவர் யார் என்பதையே சொல்லாமல் இருந்திருந்தால்கூட சிலவேளை அவரைக் கைதுசெய்த பொலிஸார் விடுவிக்காமல் அவரையும் நீதிமன்றில் நிறுத்தியிருப்பார்கள். அது இன்னும் இந்த அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்திருக்கும். அது நடந்து முடிந்த சங்கதி. ஆனால், இந்தக் கைதுகளுக்கு எதிராக - கைது நடந்து மூன்றாவது தினமே நல்லூரில் ஒரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தப் போராட்டத்தில் கட்சி பேதமின்றி அனைவரும் கலந்துகொண்டனர். ஏனோ தெரியவில்லை, தமிழ் அரசு கட்சி தலைவர்களில் சீ. வீ. கே. சிவஞானம் ஐயாவைத் தவிர மற்றையவர்களைக் காணவில்லை.

இவை பழைய சங்கதிகள்தான். ஆனால், அத்தோடு தமது கடமை முடிந்தது என்று இருந்துவிட்டார்களோ தெரியவில்லை.

ஆனால், கடந்த சில நாட்களாக மக்கள் ஆயிரம் ஆயிரமாக திரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். மக்களின் இந்தத் தன்னெழுச்சியான போராட்டம் இலங்கை அரசை திரும்பிப் பார்க்க வைத்ததோ இல்லையோ நமது மக்கள் பிரதிநிதிகளை திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றது.

சம்பவம் நடைபெற்று சுமார் ஒரு வாரம் கழித்து க. வி.  விக்னேஸ்வரனின் அழைப்பின்பேரில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அவரின் இல்லத்தில் கூடியிருந்தன. அதிலும் தமிழ் அரசு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி யாரும் காலந்துகொள்ளவில்லை. வழக்கம் போல தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கலந்துகொள்ளவில்லை.

இந்தச் சந்திப்பில் எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதியை சந்தித்து இந்த விடயம் குறித்து பேசுவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சந்திப்பில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ்த் தேசிய கட்சிகளின் எம். பிக்கள் மாத்திரமன்றி, மலையக தமிழ் எம். பிக்களையும் இணைத்துக்கொண்டே ஜனாதிபதியைச் சந்திக்கவிருப்பதாக ஒரு செய்தி தெரிவித்தது. செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் கூடவிருக்கின்றது. நமது எம்.பிக்கள் அனைவரும் பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்காக கொழும்புக்கு செல்கின்றபோது ஜனாதிபதியைச் சந்திக்கலாம் என்று முடிவெடுத்திருக்கின்றனர். கைதுசெய்யப்பட்டவர்களின் வழக்கு செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்துக்கு வரவிருக்கும் நிலையில், அதற்கு முதல்நாள் தாம் ஜனாதிபதியை சந்திப்பதன் மூலம் மறுநாள் வழக்கு விசாரணையின் போது அவர்களுக்கு பிணை வழங்குவதற்கு அரச தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்காமல் இருக்க ஜனாதிபதியின் உதவியை அவர்கள் நாடலாம். சிலவேளைகளில் அவர்களின் முயற்சி வெற்றியளிக்கவும் சந்தர்ப்பம் இருக்கின்றது. ஆனால், இத்தோடு இந்த விவகாரம் முடிந்துவிடப்போவதில்லை. அந்த எண்மரும் தொடர்ந்து வழக்குக்காக நீதிமன்றத்துக்கு தொடர்ந்து செல்ல வேண்டியிருக்கும் என்பதோடு இந்த வழக்கு தொடர்ந்து நடக்கும் என்றே எதிர்பார்க்கலாம்.

ஆனால், இதுபோன்ற விடயங்களில் நமது தலைவர்கள் தலையிட்டு தற்காலிக தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை.

சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலையில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் அடாவடித்தனமானது என்று அரசாங்கத்தின் ஓர் அங்கமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மறுதினமே அறிக்கை வெளியிட்டிருந்தார்.

அதாவது ஓர் அமைச்சரே தமது பொலிஸார் அடாவடித்தனமாக நடந்துகொண்டனர் என்று சான்றிதழ் கொடுத்திருக்கிறார். எனவே, இதுபோன்ற அடாவடித்தனங்களில் ஈடுபட்டவர்களுக்கு அதிகபட்ச தண்டனையைப் பெற்றுக் கொடுக்காதவரை இதுபோன்ற அடாவடித்தனங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்து தமது அடாவடித்தனங்களை செய்யத்தான் போகின்றார்கள். எனவே, இந்த விடயத்தை ஜனாதிபதியைச் சந்திப்பதோடு மறந்துவிடுவது சரியான தீர்வாக இருக்காது. எதிர்வரும் இருபதாம் திகதி பாராளுமன்றத்தில் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடைபெறவிருக்கின்ற நிலையில் நமது மக்கள் பிரதிநிதிகள், நமக்கு ஆதரவான சக்திகளையும் இணைத்துக்கொண்டு பாராளுமன்றத்திலேயே தமது போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டும்.

**- ஊர்க்குருவி.**

வடக்கின் பெரும் போர்:

## ஒருநாள் போட்டி வெற்றிக்கிண்ணம்; யாழ். மத்திய கல்லூரி கைப்பற்றியது




யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை 4 விக்கெட்களால் வெற்றி கொண்டது யாழ். மத்திய கல்லூரி. இதன் மூலம், வடக்கின் பெரும் போர் ஒருநாள் போட்டியை மத்திய கல்லூரி தன்வசமாக்கியது.

வடக்கின் பெரும்போர் என்று அழைக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி, யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகளின் துடுப்பாட்டப் போட்டியில், 21ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு அபிஜோய் சாந்த், கிந்துசன் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். ஓரளவுக்கு பொறுப்புடன் ஆடிய இந்த இணையை அஜய் பிரித்தார். 8 ஓட்டங்களுடன் கிந்துசன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்துவந்த ரண்ட்யோ 2 ஓட்டங்களுடன் வெளியேற களம் புகுந்தார் அணித்தலைவர் ஜெசீல். 30 ஓட்டங்களை 4 பௌண்ட்ரிகளுடன் சேர்த்த அபிஜோய்சாந்த் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் ஜெசீல் போராட பின்னர் வந்த வீரர்கள் எவரும் நிலைக்கவில்லை. 41.2 ஓவர்களில் சென். ஜோன்ஸ் கல்லூரி சகல விக்கெட்களையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. ஜெசீல் தாக்குப்பிடித்து ஆடியபோதும் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பந்துவீச்சில் தீசன் 4 விக்கெட்களையும் அஜய், நியூட்டன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 118 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரிக்கு நியூட்டன், சிமில்ரன் தொடக்கம் கொடுத்தனர்.

நியூட்டன் ஓர் ஓட்டத்துடனும் சிமில்ரன் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த டெரிக்சன் ஓரளவு நிதானம் காட்டினார். அவர் 3 பௌண்ட்ரிகளுடன் 16 ஓட்டங்களை எடுத்தார்.

பின்னர் வந்தவர்களில் சிந்துஜன், அணித்தலைவர் அஜய் ஆகியோர் நிதானம் காட்டினர். அஜய் 16 பந்துகளில் 4 பௌண்ட்ரிகளுடன் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த சயந்தன் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

30 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்த 118 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

சிந்துஜன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் பந்துவீச்சில் கவிசன் 3 விக்கெட்களையும் சஞ்சய், கஜகர்ணன், கிந்துசன் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

(ஐ)

## இத்தாலிக்கு சாரதி பணிக்காக செல்வோருக்கான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தம்

### தொழில் வாய்ப்புகள் இழக்கப்படும் ஆபத்து

கொழும்பு, மார்ச் 18

இலங்கையிலிருந்து இத்தாலிக்கு சாரதி பணிக்காக செல்வோருக்கு இலங்கையின் சாரதி அனுமதிப்பத்திரத்தை இத்தாலிய சாரதி அனுமதிப்பத்திரமாக மாற்றும் முறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், இத்தாலி வாழ் இலங்கையர்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த 2 வருடங்களாக இந்த திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தை இத்தாலிய சாரதி அனுமதிப்பத்திரமாக மாற்றும் முறையின் ஊடாக அதிக தொழில் வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இந்நிலையில், அந்த முறைமை இடைநிறுத்தப்பட்டதால் பெரும்பாலோனோர் வேலை வாய்ப்பை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தை இத்தாலிய சாரதி அனுமதிப்பத்திரமாக மாற்றுவது கேலிக்குரிய செயலாகும் எனவும் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

எவ்வாறாயினும், அந்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்துள்ளதாகவும் அதன் பணிகள் முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இது தொடர்பில் இரு நாட்டு மோட்டார் வாகன அதிகாரிகளுக்கும் இடையேயில் கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

## ஐஸ் போதைப்பொருள் வியாபாரி கைதானார்

கொழும்பு, மார்ச் 18

ஐஸ் போதைப்பொருளுடன் “கொண்டை சுது” என்ற போதைப்பொருள் வியாபாரியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவரிடமிருந்து 12 கிராம் 805 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், சந்தேக நபரிடமிருந்து இலத்திரனியல் தராசு மற்றும் இரண்டு வாள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

மேல் மாகாண ஊழல் ஒழிப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே  இவர் கைது செய்யப்பட்டார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
18.03.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அநுரவின் நழுவல் வார்த்தைகள்

தேசிய மக்கள் சக்தியின் (ஜே. வி. பி.) தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸநாயக்க - தமிழ் மக்களின் பிரச்னைகளை தங்களால் தீர்க்க முடியுமென்றும் தங்களுடைய அரசாங்கத்தில் வடக்கை பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர்கள் அங்கம் வகிப்பார்கள் எனவும் தெரிவித்திருக்கின்றார். ஆனால், அவர் பயன்படுத்தியிருக்கும் வார்த்தைகள் தமிழர் பிரச்னையில் அவர்களுக்குத் தெளிவான பார்வையில்லை என்பதையே காண்பிக்கின்றது.

அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் ஊடாக தமிழ் மக்களின் அரசியல் பிரச்னையை தீர்ப்பதாகவும் தமிழ் மக்களின் மொழி மற்றும் காணி பிரச்னைகளைத் தீர்ப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். பெருமளவுக்கு தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னையை ஒரு மொழிப் பிரச்னையாக நோக்கும் ரோகண விஜயவீர காலத்தின் அணுகுமுறையையே நினைவுபடுத்தியிருக்கின்றார். யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும்கூட நல்லிணக்க முயற்சிகள் ஆரம்பநிலையில்கூட முன்னோக்கிப் பயணிக்கவில்லை - இது தொடர்பில் அநுரகுமார சிந்திப்பதாகத் தெரியவில்லை.

அரசமைப்பில் ஏற்கனவே இருக்கின்ற விடயங்களை - அதாவது, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயங்கள் தொடர்பில் நழுவலாகவே வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கின்றார். அதாவது, எதனைக் கூறினால் சிங்கள மக்களின் வாக்குகளை பெறுவதில் பிரச்னை ஏற்படுமோ அவற்றை மிகவும் கவனமாகத் தவிர்த்திருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தி ஒருபோதும் அதிகாரத்தில் இருக்காத கட்சி - அந்த வகையில், அவர்கள் ஒருவேளை ஆட்சியை கைப்பற்றினால் - இப்படித்தான் இருப்பார்கள் என்று திட்டவட்டமாக கூறிவிட முடியாது. ஆனால், தமிழ் மக்களின் கடந்த கால அனுபவத்தில் அடிப்படையில் நோக்கினால் தென்னிலங்கையின் பிரதான கட்சிகளின் அணுகுமுறைகளுக்கும் தேசிய மக்கள் சக்தியின் அணுகுமுறைக்கும் இடையில் பெரியளவில் வேறுபாடுகளை காண முடியவில்லை.

ஊழல் ஒழிப்பு மற்றும் அதிகார துஷ்பிரயோகமற்ற ஆட்சி என்னும் கண்ணோட்டத்தில் நோக்கினால் அவர்களைப் போன்றவர்கள் நாட்டுக்கு நன்மை செய்யக் கூடியவர்களாக இருக்கலாம். ஆனால், தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்னும் வகையில் - இலங்கையர்கள் என்னும் அடிப்படையில் சிந்திக்க முடியாதுள்ளது. அவ்வாறு சிந்திப்பதற்கான அரசியல் சூழல் இலங்கைத் தீவில் இல்லை. தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ந்தும் பதற்றங்களை அதிகரிக்கக் கூடியவாறான விடயங்களே நடந்து கொண்டிருக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அமைதியாகவே இருக்கின்றது. இதுவரையில், தமிழர் பகுதிகளில் பௌத்த விகாரைகள் அமைப்பது, இந்து மத விடயங்களை சுதந்திரமாக முன்னெடுக்க முடியாதிருப்பது, மட்டக்களப்பு மேய்ச்சல் தரை விவகாரம் போன்ற விடயங்கள் தொடர்பில் அநுரகுமார தனது பார்வையை எங்குமே பதிவு செய்யவில்லை ஏன்?

தென்னிலங்கையின் பிரதான கட்சிகளிலிருந்து தாங்கள் வேறுபட்டவர்கள் என்றால் - அந்த வேறுபாட்டை அநுரகுமார நிரூபிக்க வேண்டும். அவ்வாறில்லாது நாங்கள் வந்தால் செய்வோம் என்பது சரியானதோர் அரசியல் அணுகுமுறையல்ல. ஏனெனில், இதனைத்தானே ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரும் கூறிவருகின்றனர்.

## மனித உரிமைகள் முதலுதவி மையத்தின் யாழ்ப்பாண பணிமனை திறந்து வைப்பு!

*யாழ்ப்பாணம், மார்ச் 18*

மனித உரிமைகள் முதலுதவி மையம் யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கோவில் வீதியிலுள்ள யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் மனித உரிமைகள் முதலுதவி மையம் திறந்து வைக்கப்பட்டது.

றைற் ரூ லைப் ஹியூமன் றைற்ஸ் சென்ரரின் (RIGHT TO LIFE HUMAN RIGHTS CENTRE) தலைவர் பிலிப் , இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின்



இணையத்தின் தலைவர் சுகிர்தராஜ் இணைந்து மனித உரிமைகள் முதலுதவி மையத்தை திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் சேவ் ஏ லைப் (SAVE a LIFE) யாழ். மாவட்ட இணைப்பாளர் ராகுலன், றைற் ரூ லைப் இணைப்பாளர் பிரசாந்தன், றைற் ரூ லைப் திட்ட முகாமையாளர் மதுசாலினி, மனித உரிமை பாதுகாவலர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## மாட்டை சட்டவிரோதமாக இறைச்சியாக்கியவருக்கு வலை!

*யாழ்ப்பாணம், மார்ச் 18*

சட்டவிரோதமான முறையில் மாட்டை இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் பணி இடைநிறுத்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

வடமராட்சி - புலோலி பகுதியில் வீடொன்றில் வைத்து சட்டவிரோதமான முறையில் மாடு இறைச்சியாக்கப்படுகிறது என்று பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

பொலிஸாரை கண்டதும் மாட்டை இறைச்சியாக்கிய நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இறைச்சியை கைப்பற்றிய பொலிஸார் வீட்டிலிருந்த சந்தேக நபரின் தாயாரை கைது செய்தனர்.

தற்போது அவர் மறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், அவரை கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தப்பியோடிய நபர் பொலிஸ் உத்தியோத்தர் என்றும் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில் அவர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டவர் எனவும் தெரியவருகின்றது. (ஐ-02)

## யூ- ரியூப் கேம் வினையானது மாணவன் மருத்துவமனையில்!

*கொழும்பு, மார்ச் 18*

பாடசாலை ஒன்றின் மாணவன், யூ ரியூப் கேம்களை நேரில் விளையாடி பார்க்க முயன்றபோது மற்றொரு மாணவனை கல்லால் தாக்கியுள்ளார்.

இதில் பாதிக்கப்பட்ட மாணவன் நீர்கொழும்பு மருத்துவமனையின் கண் சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். கண்ணில் கடுமையான காயத்துக்கு உள்ளான அவர் அந்தப் பாதிப்பில் இருந்து மீள பல நாட்கள் ஆகும் என்று கூறப்படுகின்றது.

இரண்டாகப் பிரிந்த மாணவர்கள் ஆசிரியரின் மேசை விரிப்பால் முகத்தை மறைத்து ஓர் அணியினர் மற்றோர் அணியை தாக்கினர். இந்நிலையில், ஒரு மாணவன் அங்கிருந்து செல்ல முயன்றபோது மற்றொரு மாணவன் அவருக்கு கல்லால் எறிந்துள்ளார்.

அப்போது, அவர் கண்ணில் காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நீரில் மூழ்கி 2 சிறார் பலி!

*கொழும்பு, மார்ச் 18*

பெற்றோருடன் ஆற்றில் நீராட சென்ற சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

காலி - யக்கலமுல்ல பிரதேசத்தில் பொல்வத்தை ஆற்றில் மூழ்கியே 11, 14 வயதுடைய சிறுவர்கள் உயிரிழந்தனர்.

சிறுவர்கள் இருவரும் உறவினர்கள் என்பதுடன் அவர்கள் தமது பெற்றோருடன் நீராடியபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 18 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 05
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : நவமி




**மேடம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். வெற்றி பெறும் நாள்.

**இடபம்**
கடந்த 2 நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் எந்த வேலையையும் முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். அலைக்கழிக்கப்படுவீர்கள். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

**கடகம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். உத்தியோகத்தில் மறைமுகஎதிர்ப்புகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம்தரும் நாள்.

**சிம்மம்**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வேலையாட்கள் கடமையுணர்வுடன்செயல்படுவார்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**கன்னி**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம்உண்டாகும் நாள்.

**துலாம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். தள்ளிப்போன விஷயங்கள் எளிதில் முடியும். தொழில் உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சின்னசின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிதானம் தேவைப்படும்.

**தனுசு**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத்தில் புதியவர்கள் நண்பர்களாவார்கள். அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார்.

**கும்பம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மீனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

# கச்சதீவு விவகாரத்தில் கருணாநிதி துரோகம்

## அண்ணாமலை தெரிவிப்பு

சென்னை, மார்ச் 18

கச்சதீவு விசயத்தில் தி. மு. க.வின் மறைந்த தலைவர் கருணாநிதி செய்தது துரோகம் என்று கூறியுள்ளார் பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை.

கச்சதீவை மீட்க கடந்த 10 ஆண்டுகளில் பா. ஜ. க. அரசு என்ன செய்தது என்று முதல்வர் ஸ்டாலின் எழுப்பிய கேள்விக்கு அவர் எக்ஸ் தளத்தில் அளித்த பதிவிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “கடந்த 1974ஆம் ஆண்டு தமிழகத்தில் தி. மு. க. ஆட்சியில் இருந்தபோது, மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசால், கச்சதீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. அதன் பிறகு பல முறை, மத்திய அரசில் பசையான அமைச்சர் பதவிகளை மட்டும் வாங்கிக் கொண்டு, கச்சதீவு விவகாரத்தில் கள்ள மௌனம் மட்டுமே சாதித்துக் கொண்டிருக்கும் தி. மு. கவுக்கு, தேர்தல் காலங்களில் மட்டுமே அதன் ஞாபகம் வருவது விந்தை. கச்சதீவு விசயத்தில் தி. மு. க. வின் மறைந்த தலைவர் கருணாநிதி செய்தது துரோகம்.

தி. மு. க. காங்கிரஸ் கூட்டணி ஆட்சியின் போது, இலங்கை கடற்படையினரால் 80இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். தமிழக மீனவர்கள் உயிரைக் காப்பாற்ற தி. மு. க. எடுத்த நடவடிக்கை வெறும் மௌனமே. கடந்த 2014-ம் ஆண்டு இலங்கை அரசால் தமிழக மீனவர்களுக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட போது, தி. மு. க. அன்றும் மௌனமாகத்தான் இருந்தது. அவர்களை பத்திரமாக மீட்டது பிரதமர் மோடிதான்.

மோடி பிரதமராக பொறுப்பேற்ற பிறகு இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் மீனவர்கள், உடனுக்குடன் மீட்கப்படுகிறார்கள். ஒட்டுமொத்த பாரத நாடும், நமது மீனவர்களுக்கு உறுதுணையாக நிற்கிறது.

கச்சதீவை விட்டுக் கொடுத்து, தமிழக மீனவர்கள் வாழ்வாதாரத் தைப் பாதிப்புக்குள்ளாக்கி விட்டு, ஐம்பது ஆண்டுகள் மௌனமாக இருந்து கொண்டு, தேர்தல் நேரத்தில் மட்டும் கச்சதீவு குறித்துப் பேசும் ஸ்டாலின் சுயபரிசோதனை செய்ய வேண்டியம் நேரம் இது - என்றுள்ளது.

(ஐ)

# 7 கட்டமாக தேர்தல் கமல் விமர்சனம்!

சென்னை, மார்ச் 18

7 கட்டமாக மக்களவைத் தேர்தல் நடைபெறுவதை மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் விமர்சித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலுக்கான திகதிகள் சனிக்கிழமை அறிவிக்கப்பட்டன. மொத்தம் 7 கட்டங்களாக ஏப்ரல் 19இல் தொடங்கி ஜூன் முதலாம் திகதி வரை வாக்குப் பதிவு நடக்கவுள்ளது.

இது தொடர்பாக கமல்ஹாசன் தனது எக்ஸ் பக்கத்தில், “ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முன் ‘ஒரே கட்டமாக தேர்தல்’ நடத்தும் முறையை ஏன் நடைமுறைப்படுத்தக்கூடாது? என்று கேள்வி எழுப்பியுள்ளார். (ஐ)

# தமிழ்நாடு முழுவதற்கும் ஒரேநாளில் வாக்கு பதிவு

புதுடில்லி, மார்ச் 18

பாராளுமன்றத் தேர்தல் இந்தியா முழுவதும் 7 கட்டமாக நடைபெறவுள்ளது. இதில் முதல் கட்டமாக தமிழ்நாடு, புதுச்சேரி உள்பட 21 மாநிலங்களில் தேர்தல் நடக்கிறது.

முதல் கட்ட தேர்தல் நடைபெறும் உத்தரபிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், மராட்டியம் போன்ற மாநிலங்கள் எல்லாம் தமிழ்நாட்டை காட்டிலும் கூடுதல் தொகுதிகளை கொண்ட மாநிலங்கள் ஆகும்.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஷ்கர் போன்ற மாநிலங்கள் எல்லாம் தமிழ்நாட்டைவிட குறைந்த தொகுதிகளை கொண்ட மாநிலங்கள். மற்றவை ஓரிரு தொகுதிகளைக் கொண்ட யூனியன் பிரதேசங்கள் ஆகும்.

மேற்கண்ட எந்த மாநிலத்திலும் முதல் கட்ட தேர்தலில் அனைத்து தொகுதிகளுக்கும் வாக்குப் பதிவு நடக்கவில்லை. ஆனால், 39 தொகுதிகளைக் கொண்ட தமிழ்நாட்டில் மட்டுமே அந்த 39 தொகுதிகளுக்கும் ஒரே கட்டத்தில் அதாவது ஒரே நாளில் வாக்குப் பதிவு நடக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# கனிமொழியை எதிர்க்கிறார் ராதிகா?

சென்னை, மார்ச் 18

தமிழ்நாட்டில் போட்டியிட வைக்க திரை நட்சத்திரங்களுக்கு பா. ஜ. க. வலை வீசுவதாகத் தெரிகிறது. தூத்துக்குடி தி. மு. கவின் கனிமொழி எம். பிக்கு எதிராக நடிகை ராதிகாவை போட்டியிட வைக்க முயற்சிக்கப்படுகிறது என்று தெரிய வருகின்றது.

பா. ஜ. க. சார்பில் போட்டியிடுபவர்களில் மக்களிடையே பிரபலமானவர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில், முக்கியமாக திரையுலக நட்சத்திரங்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்களுக்கு வாய்ப்பளித்தால் சுற்றியுள்ள தொகுதிகளிலும் பலன் கிடைக்கும் என பா. ஜ. க. எதிர்பார்க்கிறது. எனவே, தமிழகத்திலும் திரையுலகப் பிரபலங்களை போட்டியிட வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, தூத்துக்குடியில் கனிமொழியை எதிர்த்து ராதிகாவை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. எனினும், உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியாகவில்லை. ஆனால் ராதிகா, விருதுநகரில் போட்டியிட விரும்புகிறார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# மோடியின் தலைமையில் இன்று வாகனப் பேரணி!

## - கோவையில் ஒரு இலட்சம் பேர் திரள்வர்-

கோவை, மார்ச் 18

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இன்று கோவையில் நடக்கும் வாகனப் பேரணியில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் திரள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர் நரேந்திர மோடி நான்காவது முறையாக இன்று திங்கட்கிழமை தேர்தல் பிரசாரத்துக்காக தமிழகம் வருகிறார்.

இன்றைய தினம் கோவையில் நடைபெறும் பிரமாண்ட வாகன பேரணியில் பங்கேற்கிறார்.

கர்நாடாகவில் பிரசாரத்தில் தங்கியுள்ள பிரதமர் மோடி இன்றைய தினம் விமானம் மூலம் கோவை வருவார். பின்னர், பிரதமர் மோடி வாகன பிரசாரத்தை தொடங்குகிறார். இந்த வாகனப் பேரணியில் சுமார் ஒரு இலட்சம் பேரை திரட்ட பா. ஜ. கவினர் ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

தேர்தல் திகதி அறிவிப்புக்கு பின் பிரதமர் மோடி பங்கேற்கும் கூட்டம் இது என்பதால் கூட்டணி தலைவர்களும் பங்கேற்பர் என்று கூறப்படுகின்றது.

பிரதமரின் வருகையை முன்னிட்டு கோவை மாநகர் முழுவதும் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு, 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

(ஐ)

# தேசத்தை தமிழில் கையாளும் உரிமையை உறுதி செய்வோம்

## வவுனியாவில் அநுரகுமார தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 18

**உங்கள்(தமிழ்)மொழியில்தேசத்தைகையாள்வதற்கான உரிமையை உறுதி செய்வோம் தேசிய மக்கள் சக்தியின் (ஜே. வி. பி.) தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்ட மாநாட்டில் உரையாற்றிய அவர்,

தீவிரவாதிகளோ, இனவாதமோ இல்லாத மிதவாத தமிழ்த் தலைவர்களுடன் ஏற்கனவே கலந்துரையாடி வருகிறோம். அவர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க வேண்டும். எதிர்கால தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் மொழிப் பிரச்னை, காணிப் பிரச்னை போன்றவற்றுக்கு தேசிய மக்கள் சக்தி தீர்வு காணும். தமிழர்களின் அரசியல் உரிமைகளை உறுதிசெய்யும் வகையில் அரசமைப்புத் திருத்தங்களை கொண்டுவருவோம்.

மொழிப் பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கிறோம். உங்கள் (தமிழ்) மொழியில் தேசத்தை கையாள்வதற்கான உரிமையை உறுதி செய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)





# எல்லை கடந்த மீன்பிடி 21 இந்திய மீனவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 18

எல்லை தாண்டி வந்து இலங்கை கடற்பரப்பினுள் மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 21 மீனவர்கள் 2 படகுகளுடன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்தே இலங்கை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான மீனவர்கள் நீரியல் வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

நீரியல் வளத் திணைக்களத்தினர் கைதான மீனவர்கள்மீது ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள் வழங்கப்பட்டன

வடமராட்சி, மார்ச் 18

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடந்த வாரமும் பல உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தில் தரம் - 08 மற்றும் தரம் - 11 இல் கல்வி கற்கும் இரு மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இதேபோன்று, தொண்டைமானாறு

ஜே/386 - கெருடாவில் வடக்கு, ஜே/385 - கெருடாவில் தெற்கு, ஜே/383 - தொண்டைமானாறு தெற்கு கிராம சேவகர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட சிறுவர், கர்ப்பவதி தாய்மார் உள்ளடங்கலான 26 குடும்பங்களுக்கு பங்குனி மாதத்துக்கான சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடந்த இந்த உதவி வழங்கும் நிகழ்வில், வவுனியா - கோவில்புளியங்குளம், கணேசபுரம் அறநெறி பாடசாலைகளை சேர்ந்த 135 மாணவர்களுக்கு சீருடை துணிகளும் தையல் கூலிக்கான தொகையாக ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டன. (ஐ)

# மன்னார் காற்றாலை மின் திட்டம் பறவைகளுக்கான மரணப் பொறி

## தி இந்து நாளிதழ் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 18

மன்னாரில் அதானி குழுமம் முன்னெடுக்கவுள்ள காற்றாலை மின் திட்டம் பறவைகளுக்கான மரணப் பொறி என்ற கருத்து நிலவுவதாக இந்தியாவின் பிரபல நாளிதழான தி இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், இந்தியாவின் அதானி கிறீன்ஸ் நிறுவனத்தினால் இலங்கையின் வடபகுதியில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் சர்ச்சைகளை எதிர்கொண்டுள்ளது. கரையோர பகுதிகளிலும் வாழ்வாதாரத்திற்கும் இந்த திட்டத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து சூழலியாளர்களும் உள்ளூர் மக்களும் கரிசனையும் கவலையும் வெளியிட்டுள்ளனர்.

இலங்கையின் வடபகுதியில் காற்றுவளம் அதிகமாக உள்ள இரண்டு பகுதிகளில் 4.2 கோடி டொலரில் இரண்டு காற்றாலை மின்னுற்பத்தி திட்டதை முன்னெடுப்பதற்கு கடந்த வருடம் இலங்கையின் முதலீட்டு சபை அனுமதி வழங்கியிருந்தது.

இலங்கையின் அதிகரிக்கும் எரிசக்தி தேவைகளை எதிர்கொள்வதற்காக 2030ஆண்டுக்குள் இந்த எரிசக்திதேவையின் 70 வீதத்தை மீள்புதுப்பிக்கத்த சக்திவளங்கள் மூலம் பெறுவதற்காக அரசாங்கம் இந்தத் திட்டங்களை முன்னெடுக்கின்றது. இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்கு 11.5 பில்லியன் டொலர் நிதி தேவைப்படுகின்றது.

மீள்புதுப்பித்தக்க சக்திவளங்கள் என்ற விடயத்தில் இலங்கையுடன் நெருங்கிய ஒத்துழைப்பை பேணுவதற்கு இந்தியா இணங்கியுள்ளது. மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவளங்கள் தொடர்பான இருநாடுகளிற்கும் இடையிலான செயல்குழுவின் முதலாவது கூட்டம் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில் மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களை உருவாக்குவதற்காக இந்தியா 11 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இதேவேளை, அதானி குழுமம் முன்னெடுக்கவுள்ள காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தால் பிரதேசத்தின் பல்லுயிர் தன்மைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் கரையோர சூழலுடன் பின்னிப்பிணைந்துள்ள அந்த பகுதி மக்களின் வாழ்வாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என சூழலியாளர்களும் பொதுமக்களும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களாகின்ற நிலையில் இலங்கையின் ஆட்சியாளர்கள் முன்னெடுத்த பொருளாதார மீட்சி திட்டங்கள் தோல்வியடைந்த நிலையில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கில் பெருமளவு குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

பறவைகள் குறித்த ஆய்வாளர்கள் மற்றும் வல்லுநர்களின் தகவலின் படி மன்னார் மத்திய ஆசியாவின் பறவைகள் பறக்கும் பாதையின் ஒரு முக்கிய பகுதியாகும். உலகின் உள்ள பல நீர்பறவை இனங்களின் முக்கியமான இடம்பெயர் பாதையாக இது காணப்படுகின்றது. இந்த காற்றாலை மின் திட்டம் பறவைகளிற்கு ஒரு மரணப் பொறி என கவலை வெளியிட்டார் கொழும்பு பல்கலைகழகத்தின் விலங்கியல் மற்றும் சுற்றுச்சூழல் விஞ்ஞானபிரிவைசேர்ந்த பேராசிரியர் சம்பத் செனிவிரட்ன. (ஐ)

# போலி கனடிய வீஸாவுடன் யாழ்ப்பாண இளைஞர் கைது!

கொழும்பு, மார்ச் 18

போலி கனடிய வீஸாவில் செல்ல முயன்ற யாழ். இளைஞர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு - குடியகல்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

வடமராட்சி - பருத்தித்துறையை சேர்ந்த 24 வயது இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இவர் டோஹா ஊடாக பயணிக்க கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்த போதே பிடிபட்டார்.

விமான அனுமதியின் போது அவர் வழங்கிய கனடிய கடவுச்சீட்டில் சந்தேகம் எழுந்ததால் நடத்தப்பட்ட சோதனையில் அது போலியானது என்று கண்டறியப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் அவரின் உண்மையான கடவுச்சீட்டும் கைப்பற்றப்பட்டது. மேலும், இதற்காக கனடாவில் உள்ள இளைஞரின் மாமனாரே அவரை கனடா அழைக்க உதவினார் என்றும். இதற்காக தரகர் ஒருவருக்கு 40 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டதாகவும் இளைஞர் கூறியுள்ளார்.

மேலதிக விசாணைகளுக்காக இளைஞர் குற்றப் புலனாய்வு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# தண்ணீரின்றி சிரமப்படும் முத்துஐயன்கட்டு மக்கள்

முல்லைத்தீவு, மார்ச் 18

முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும் நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாகிய முத்துஐயன் கட்டு குளத்தில் போதியளவு தண்ணீர் நிரம்பியுள்ளபோதிலும், தமக்கான தண்ணீர் விநியோகம் உரிய முறையில் விநியோகிக்கப்படவில்லை. இதனால், குடிதண்ணீர், பயிர்களுக்கு தேவையான தண்ணீர் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-ஐ)

# இந்திய வீடமைப்புத் திட்டத்தில் வெளிப்படை தன்மை அவசியம்!

## மனோ கணேசன் எம். பி.



கொழும்பு, மார்ச் 18

**இந்திய வீடமைப்புத் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“ஒரு வீடு 28 இலட்சம் ரூபாய் என்ற மதிப்பீட்டுடன், 1,300 வீடுகளைக் கட்டும் பெருந்தோட்ட மக்களுக்கான இந்திய வீடமைப்பு வேலைத் திட்டப் பணிகள் தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்டங்களில் இந்திய உதவியுடனான தனி வீடுகள் கட்டும் திட்டத்தை, 2015- 2019 ஆண்டுகால நல்லாட்சியின் பங்காளிகளாக இருந்தபோது நாம் ஆரம்பித்து வைத்தோம். எமது காலப் பகுதியில் நடைபெற்ற இந்த வீடு கட்டும் பணிகளில், யூ.என். - ஹெபிடாட் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித வாழ்விடத் திட்டம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம் ஆகிய நம்பகத்தன்மை கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் கட்டுமானப் பணிகளை நடைமுறைபடுத்தல், கண்காணிப்பு ஆகிய பொறுப்புகளை சிறப்பாகச் செய்தன.

பணிகளைக் கூட்டிணைக்கும் பொறுப்பை மாத்திரமே எமது புதிய கிராமங்கள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு செய்தது. இதனால், இந்திய உதவியுடனான பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டத்தில் முழுமையான வெளிப்படைத்தன்மை அன்று இருந்தது.

இன்று இந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்தப் பொறுப்புகளில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளன. ஆகவே, வெளிப்படைத்தன்மை தொடர்பான கேள்விகள் எழுந்துள்ளன. எமது கேள்விகளைக் கண்டு எவரும் பதற்றமடையத் தேவையில்லை. நாம் நியாயமான கேள்விகளைத்தான் எழுப்புகின்றோம். அவற்றுக்கு பொறுப்பில் உள்ளவர்கள் பதில் கூறக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இந்தியா ஒட்டுமொத்தமாக 46 ஆயிரம் வீடுகளை வடக்கு - கிழக்கிலும், 14 ஆயிரம் வீடுகளைப் பெருந்தோட்டங்களிலும் கட்டுவிக்கின்றது. இதில் மூன்று கட்டங்களில் வடக்கு - கிழக்கில் 46 ஆயிரம் வீடுகளும், பெருந்தோட்டங்களில் 4 ஆயிரம் வீடுகளும் பூர்த்தியடைந்துள்ளன. மிகுதி 10 ஆயிரம் வீடுகளில் 1,300 வீடுகள் நான் காம் கட்டப் பணி ஆரம்பமாகியுள்ளது.

முதல் மூன்று கட்டங்களிலும் மேற்சொன்ன நம்பகத் தன்மை கொண்ட அரசசார்பற்ற நிறுவனங்கள், கட்டுமான நடைமுறைப்படுத்தல், கண்காணிப்புப் பணிகளைச் செய்தன. அரச நிறுவனமான தேசிய வீடமைப்பு அதிகார சபையும் பங்கு வகித்தது. இந்த முறை, அரசசார்பற்ற நிறுவங்கள் அகற்றபட்டு முழுப் பொறுப்பும் அரச நிறுவனங்களான தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு மாத்திரம் வழங்கபட்டுள்ளன.

ஒரு வீடு 28 இலட்சம் ரூபாய் என்ற மதிப்பீட்டுடன், 1,300 வீடுகளை கட்டும் பணி, எவரது கோரிக்கையின் பேரில், எக்காரணத்துக்காக அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்கபட்டுள்ளது என்ற கேள்வி மலைநாடு முழுக்க இன்று எதிரொலிகின்றது. அதையே, இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்களின் அதிக வாக்குகளையும், மலையக தமிழ் மக்களின் ஆணையையும் பெற்ற தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் என்ற முறையில் நான் இங்கே எழுப்புகின்றேன்- என்றார்.

(ஐ)

# எமது ஆட்சியில் ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்படும்!

## ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மார்ச் 18

எதிர்கால ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆங்கில மொழிக் கல்வியை கட்டாயமாக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தரம் ஒன்று முதல் பதின்மூன்று வரையிலான மாணவர்களுக்கு ஆங்கில வழிக் கல்வியை கட்டாயமாக்குவோம் என குருநாகலில் நடைபெற்ற இளைஞர் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் தெரிவித்தார்.

மேலும், “இளைஞர்களுக்கு சீனம், ஹிந்தி, ஜப்பானியம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணனி அறிவியல் ஆகியவற்றை இலவசமாகக் கற்பிப்போம்” என்றும் அவர் கூறினார். (ஐ)

# யுக்திய நடவடிக்கையில் 926 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, மார்ச் 18

யுக்திய நடவடிக்கையின் போது கடந்த 24 மணி நேரத்துக்குள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 926 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 73 சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர். 23 சந்தேக நபர்கள் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# தலைக்கவசம் அணியாத இளைஞர் விபத்தில் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 18

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் சென்று விபத்தில் இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கிளிநொச்சி பளையை சேர்ந்த சாந்தலிங்கம் நிரோஜன் (வயது 21) என்ற இளைஞரே நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

கடந்த 11 ஆம் திகதி மோட்டார் சைக்கிள் விபத்தில் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தலைக்கவசம் அணியாத நிலையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி விபத்துக்குள்ளா இளைஞர் தலையில் படுகாயமடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அச்சுறுத்தல் இல்லாவர்களுக்கான பொலிஸ் பாதுகாப்பை நீக்க முடிவு

கொழும்பு, மார்ச் 18

அரசியல்வாதிகளுக்கும் ஏனையவர்களுக்கும் தேவையற்ற வகையில் வழங்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் விரைவில் நீக்கப்படுவார்கள் - என்று பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாத நிலையில் உயரடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள அரசியல்வாதிகள் உட்பட பல்வேறான தராதரங்களை கொண்ட முக்கியஸ்தர்கள் தொடர்பில் தேடியறிந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு அவர் அரச புலனாய்வு சேவைக்கு பணித்துள்ளார்.

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லாத நபர்களுக்கு சுமார் 5 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார். இதனால், சாதாரண கடமைகளுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்றும் அவர் கூறினார்.

# பாண், கேக் விற்பனை 40 சதவீதத்தால் வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 18

பாண் மற்றும் கேக்கின் விற்பனை 40 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் கேள்வியும் 25 சதவீதத்தால் குறைந்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் என். கே. ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேலும் வெதுப்பக உற்பத்திகளுக்கு தேவையான மூலப் பொருட்களின் விலை கடந்த காலங்களில் அதிகரித்துள்ளன. இந்நிலையில் இதற்கு இணையாக பாண் மற்றும் கேக் உள்ளிட்ட ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வெதுப்பக உற்பத்தி பொருட்களின் கேள்வியும் குறைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# என்னை திருடன் என்று கூறிய விஜித ஹேரத்மீது நடவடிக்கை

## ரோஹித அபேகுணவர்த்தன

கொழும்பு, மார்ச் 18

என்னை திருடன் என்று குறிப்பிட்டு போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பேன் என கோப் குழுவின் தலைவர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பணிமனையில் விஜித ஹேரத் கடந்த வியாழக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில், ‘ஊழல் மோசடிகளை வெளிக்கொண்டு வரும் கோப் குழுவின் தலைவர் பதவிக்கு திருடர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்’ என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தின் குற்றச்சாட்டை மேற்கோள்காட்டி கோப் குழுவின் தலைவர் ரோஹித அபேகுணவர்த்தன நேற்றுமுன்தினம் செய்தியாளர் சந்திப்பை நடத்தினார்.

அதில், கோப் குழுவின் தலைவராக நான் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டேன். இந்த நியமனம் தொடர்பில் பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் என்னை திருடன் என்று விமர்சித்துள்ளார்.

எதைத் திருடினேன், எங்கு திருடினேன் என்பதை அவர் ஆதாரத்துடன் நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும். ஆகவே இவரது பொய்யான குற்றச் சாட்டுக்கு எதிராக அடுத்த வாரம் சட்ட நடவடிக்கை எடுப்பேன்.

போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதும் வெறுப்புகளை தூண்டி விடுவதும் மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி கொள்கை. பொய்யான குற்றச்சாட்டுக்களால் எனது அரசியல் பயணத்தை பலவீனப்படுத்த முடியாது. எமது கட்சியான சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சின்னம் தாமரை மொட்டு. அந்தத் தாமரை சேற்றில் தான் மலர்கிறது என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# கடலில் மூழ்கி சிறுமி மரணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 18

வேலணை - சாட்டி கடலில் நீராடிய சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நாவாந்துறை யைச் சேர்ந்த அவந்திகா விஜயகாந்த் என்ற 11 வயது சிறுமியே உயிரிழந்தார். நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சிறுமியின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(ஐ)

# கோட்டாபயவை விலக்கும் போராட்டம் பின்னணியில் சிறுபான்மையினர்களே!

## சிங்கள - பௌத்தர்கள் இல்லையாம் என்று சொல்கிறார் சுகீஸ்வர பண்டார

**கொழும்பு, மார்ச் 16**

**கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்கிய தன் பின்னணியில் கத்தோலிக்க திருச்சபை, முஸ்லிம் சமூகம் மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இருக்கின்றனர் என்று சிங்கள - பௌத்த சக்திகள் அவர்களில் இல்லை. இந்தப் போராட்டத்துக்கு முஸ்லிம் சமூகத்தவர்களே தலைமை தாங்கினர் -என்று அவரின் முன்னாள் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டார தெரிவித்துள்ளார்.**

தனியார் யூ - ரியூப் சனலுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனை கூறியுள்ளார்.

அரச எதிர்ப்புப் போராட்டங்களின்போது புலனாய்வுப் பிரிவினர் தமது கடமைகளை சரியாக செய்யவில்லை. இதனால், ஒட்டுமொத்த பாதுகாப்புத் துறையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மிக நெருக்கமான அதிகாரிகள் பலர் தமது பொறுப்புகளை புறக்கணித்தனர். 2022 மார்ச் 31ஆம் திகதி மிரிஹானவில் உள்ள கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டபோது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கோட்டாபய வீட்டில் இருந்தார். இதன்போது அவர்கள் இருவருக்கும் இடையில் தனிப்பட்ட கலந்துரையாடல் நடைபெற்றது.

வீட்டினருகே போராட்டம் நடத்த சுமார் 150 பேர் வருவார்கள் என உளவுத்துறையினர் தகவல் வழங்கியிருந்தனர். ஆனால், அங்கு வந்தவர்களின் எண்ணிக்கை 2,500 பேருக்கும் மேல் இருக்கும். பேராட்டக்காரர்களை கட்டுப்படுத்த கலவரத் தடுப்புப் பிரிவினரை அழைப்பதிலும் தாமதம் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற்றுவதற்கு படையினர் அரை மணித்தியாலம் தாமதித்திருந்தால் கோட்டாபய ராஜபக்ஷவைக் கொல்ல திட்டமிட்டிருப்பார்கள். முஸ்லிம் சமூகத்தினரே இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கினர். கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்கியதன் பின்னணியில் கத்தோலிக்க திருச்சபை, முஸ்லிம் சமூகம் மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இருக்கின்றனர் என்று சிங்கள - பௌத்த சக்திகள் அவர்களில் இல்லை - என்றும் கூறினார்.

(ஐ)

# முரண்பாட்டால் ஒருவர் கொலை

*கொழும்பு, மார்ச் 18*

சுற்றுலா விடுதி உரிமையாளர்களுக்கு இடையிலான முரண்பாட்டில் ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொல்லப்பட்டார். இந்தச சம்பவம் தொடர்பில் 3 பெண்கள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 18 வயது இளைஞரும் 18, 40, 55 வயதுடைய மூன்று பெண்களுமே கைது செய்யப்பட்டனர்.

இந்த கொலை சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு சந்தேக நபர்கள் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர். அவர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

38 வயது நபரே கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவர் போதைப் பொருள் கும்பல் ஒன்றுடன் தொடர்பில் இருந்தவர் என்றும் தெரியவருகின்றது.

(ஐ)

# நீர் விநியோகம் 15 வீதம் அதிகரிப்பு

*கொழும்பு, மார்ச் 18*

நாட்டில் நிலவும் வறட்சியான வானிலை காரணமாக நீர் பயன்பாடு 15 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நீரைச் சிக்கனமாக பயன்படுத்துமாறு பொது மக்களுக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அனுஜா களு ஆராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் ஹற்றன், கம்பலவத்தை, ஊருபொக்கை, புஸ்ஸல்லாவை மற்றும் கொட்டகலை ஆகிய ஆறு நீர் விநியோக கட்டமைப்புகளில் இருந்து தற்போது மக்களின் தேவைக்காக நீர் திறந்து விடப்படுவதாக அவர் தெரிவித்தார்.

(அ)

# மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்த பெண் கைதானார்

*யாழ்ப்பாணம், மார்ச் 18*

யாழ்ப்பாணத்தில் மாணவர்களுக்கு போதைப்பாக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலி மற்றும் வல்லை பகுதிகளில் மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பாக்கு விற்பனையில் பெண்ணொருவர் ஈடுபட்டுள்ளார் என அச்சுவேலி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலையே அவர் கைது செய்யப்பட்டார்.

பெண்ணை கைது செய்த போது ஒன்றரை லீற்றர் கசிப்பு மற்றும் கஞ்சா கலந்த மாவா பாக்கு ஒரு தொகை என்பன அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# ஜனாதிபதி புலமைப்பரிசில் விண்ணப்ப திகதி நீடிப்பு!

*கொழும்பு, மார்ச் 18*

பொருளாதார நெருக்கடியில் உள்ள பிள்ளைகளுக்கு உதவும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட "ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டம் 2024/25"க்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி ஏப்ரல் 1ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

தரம் 1 முதல் தரம் 11 வரை பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தின் அடிப்படையில் இந்த புலமைப் பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**www.facebook.com/president.fund** என்ற இணையத்தளத்தின் ஊடாக ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோக பூர்வ முகநூல் பக்கத்திலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# மோதரை துப்பாக்கிச்சூடு பிரதான சந்தேகநபர் கைது

*கொழும்பு, மார்ச் 18*

கொழும்பு 15 - மோதரை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பரகந்தெனிய பிரதேசத்தை சேர்ந்த 35 வயதுடையவராவார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் , பேலியகொடை, விக்ரோறியா பாலதுக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கைது நடவடிக்கையின்போது சந்தேகநபரிடமிருந்து 11 கிராம் 600 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பில் கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேக நபரொருவரும் மோதரை பொலிஸாரால் மூன்று சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கி சூட்டு சம்பவத்திற்காக பயன்படுத்தப்பட்ட கார் மற்றும் தப்பிச்செல்ல பயன்படுத்தப்பட்ட ஓட்டோ என்பவையும் கைப்பற்றப்பட்டன.

கடந்த 13 ஆம் திகதி அன்று கொழும்பு 15 மோதரை பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் பணிபுரியும் நபரொருவரை கொலை செய்ய முயற்சித்து இந்த துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# மன்னார் காற்றாலை மின் திட்டம் சூழலையும் மக்களையும் பாதிக்கும்!

## சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையம்

*கொழும்பு, மார்ச் 18*

இந்தியாவின் அதானி நிறுவனத்தால் மன்னாரில் முன்னெடுக்கப்படவிருக்கும் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தால் அந்தச் சூழலுக்கும், மக்களுக்கும் மிக மோசமான பாதிப்புகள் ஏற்படும். ஆகவே, இந்தத் திட்டத்தை இடைநிறுத்த வேண்டும் எனவும் சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையம் வலியுறுத்தியுள்ளது.

மன்னார் காற்றாலை மின் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் பல்வேறு சூழலியல் பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க நேரும். ஆகவே, இதனை உடனடியாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மன்னார் மாவட்டத்தை தளமாகக்கொண்ட அமைப்புகள் நீதிக்கான கேந்திர நிலையத்தை கோரின. அத்துடன், இந்த விவகாரம் தொடர்பில் அவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு அளித்தனர்.

சுமார் 43 ஆயிரம் குடும்பங்கள் வசிக்கம் மன்னாரில் 250 மெகாவோற் காற்றாலை மின் உற்பத்திக்கென 52 டேர்பைன்களைப் (விசையாழி) பொருத்துவதால் பறவைகளின் வாழிடங்கள் அழிக்கப்பட்டு, அவை வேறு பகுதிகளுக்கு இடம்பெயரல், பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் பாதிப்படைதல், பனை மரங்கள் சேதமடைதல், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படல் போன்ற பல்வேறு சூழலியல் மற்றும் அது சார்ந்த சமூக பிரச்னைகள் ஏற்படும் என அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை பறவைகளின் இடப்பெயர்வு, வெள்ளப் பெருக்கால் ஏற்படக்கூடிய பாதிப்பை அதிகப்படுத்தல், கடற்சூழல் பாதிப்புக்கள் என்பன உள்ளடங்கலாக இந்தக் காற்றாலைத் திட்டத்தால் ஏற்படக்கூடிய சூழல் பாதிப்புகளை சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையம் சுட்டிக்காட்டியதுடன் இந்தத் திட்டத்தின் விளைவுகள் தொடர்பில் முறையான சூழலியல் மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை எனவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

(ஐ)

# பேராதனையில் விபத்து; ஒருவர் பலி; 37 பேர் காயம்!

*கண்டி, மார்ச் 18*

மரத்துடன் பேருந்து மோதுண்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 37 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

கண்டி - பேராதனை - கொப்பேகடுவை சந்தியில் - யஹலத்ன பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நெல்லிகலை சர்வதேச பௌத்த நிலையத்திற்கு வழிபடுவதற்காக பூண்டுலோயா பகுதியிலிருந்து பயணித்தவர்களின் பேருந்தே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பேருந்து வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்கு உள்ளானது. இதில், 38 பேர் காயமடைந்தனர். இவர்கள் கண்டி போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

எனினும், அங்கு 79 வயதான முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். காயமடைந்தவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் விரோதப்போக்கு

## இமரான் மஹரூப் எம். பி. குற்றச்சாட்டு

திருகோணமலை, மார்ச் 18

**கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அதிகாரிகளுக்கு எதிரான விரோதப் போக்கு தொடர்ந்து வருகின்றது. கட்டம் கட்டமாக முஸ்லிம் அதிகாரிகள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றனர். இந்த நிலைமை இன்னும் நீடிக்குமாக இருந்தால் கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அதிகாரிகள் எவரும் பணி புரிய முடியாத நிலை ஏற்படலாம் - இவ்வாறு கூறியுள்ளார் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப்.**

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர் பதவிகளில் இருந்த முஸ்லிம் அதிகாரிகள் ஆளுநரால் அகற்றப்பட்ட செய்தியை ஏற்கனவே நான் பகிரங்கப்படுத்தியிருந்தேன். அந்த வரிசையில் தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவை மூத்த அதிகாரி ஒருவர் எவ்வித பதவியும் வழங்கப்படாது இடமாற்றப்பட்டிருக்கிறார்.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் 5 அமைச்சுகளில் இரண்டு தமிழ் செயலாளர்களும், இரண்டு முஸ்லிம் செயலாளர்களும், ஒரு சிங்கள செயலாளரும் பணியாற்றி வந்தனர். இந்த மாகாணத்தின் இனச் சமநிலையைக் கருத்தில் கொண்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது கிழக்கு மாகாணத்தில் எந்தவோர் அமைச்சிலும் முஸ்லிம் செயலாளர்கள் இல்லை. முதலமைச்சு, சுகாதாரம், வீதி அபிவிருத்தி ஆகிய 3 அமைச்சுகளிலும் தமிழ் செயலாளர்களும், கல்வி, விவசாயம் ஆகிய இரண்டு அமைச்சுக்களிலும் சிங்கள செயலாளர்களும் கடமை புரிகின்றனர். இது இந்த மாகாணத்தில் வாழ்கின்ற ஒட்டுமொத்த முஸ்லிம் சமுகத்தின் பிரதிநிதித்துவத்தையும் கொச்சைப்படுத்தும் செயல்பாடாகும். எனினும், எந்த அரசியல் தலைமையும் இதனைக் கண்டுகொண்டாதாகத் தெரியவில்லை.

எனவே. கிழக்கு மாகாண முஸ்லிம் சமுகம் விழித்தெழ வேண்டிய அவசர நிலை தற்போது ஏற்பட்டுள்ளது - என்றார்.

(ஐ)



# திருமலை பொது நூலகத்தில் கலை, இலக்கிய நிகழ்ச்சி!

திருகோணமலை, மார்ச் 18

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தின் வாசகர் வட்ட ஏற்பாட்டில் மகளிர் தின சிறப்பு கலை, இலக்கிய நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நகராட்சி மன்ற பொது நூலகத்தின் ஏற்பாட்டில் பல தரப்பட்ட இலக்கிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன. மகளிர் தினத்தை முன்னிட்டு பொது நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் ஜமாலியா சமூகநிலையத்தின் அனுசரணையுடன் இந்நிகழ்வு நகராட்சி மன்றத்தின் பொது நூலக பிரதம நூலகர் ந. யோகேஸ்வரனின் வழிகாட்டலில், வாசகர் வட்ட தலைவர் ச. திருச்செந்தூரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பல கலை, இலக்கிய நிகழ்வுகள் நடைபெற்றன. அது மட்டும் இல்லாமல் விசேடதேவையுடையவர்களுடைய சிறப்பு நிகழ்வுகளும் நடைபெற்றன. தொடர்ந்து சமூக சேவையாற்றிய மகளிருக்கு கௌரவிப்பும் நடைபெற்றது.

(ஐ- 04)

# உன்னிச்சை கிராமத்தில் காட்டு யானைகள் தொல்லை!

மட்டக்களப்பு, மார்ச் 18

மட்டக்களப்பு - வவுணதீவு - உன்னிச்சை இருநூறாவில் கிராமத்தில் காட்டு யானைகளின் வரத்து அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் அச்சம் தெரிவித்தனர்.

இரவு நேரங்களில் கிராமத்துக்குள் புகும் யானைகளால் தாம் அச்சமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவர்கள், கடந்த ஒரு மாத காலத்துக்குள் யானைகளால் இரு வீடுகள் சேதப்படுத்தப்பட்டன என்றும் கூறினர்.

மேலும் கிராமத்துக்குள் புகும் யானைகள் பயிர்களையும் அழித்துச் செல்கின்றன. எனவே, யானைகளின் ஊடுருவலை தடுக்கக மின்சார வேலி அமைக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ)

# தமிழ் அரசு கட்சியின் மட்டு. கிளை ஓரணியாக செயல்படத் தீர்மானம்!

மட்டக்களப்பு, மார்ச் 18

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கிளைக் கூட்டத்தில் கடந்த காலங்களில் நடைபெற்ற கசப்பான சம்பவங்களை மறந்து ஓரணியில் செயல்பட தீர்மானித்துள்ளோம் - என்று அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பொது நூலகத்தில் மட்டக்களப்பு கிளையின் செயல்குழு கூட்டம் அண்மையில் நடந்தது. இதில், பாராளுமன்ற உறுப்பினரான இரா. சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சீ. யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன், முன்னாள் மேயர் தி. சரவணபவன் ஆகியோர் பங்கேற்றனர்.

இவர்கள் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

தேசிய ரீதியில் தமிழ் அரசுக் கட்சிக்குள் எழுந்துள்ள செயலாளர் தெரிவு உள்ளிட்ட பிரச்னைகளை தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை கூட்டங்கள் நடைபெறும்போது அங்கு பேசி தீர்மானிக்கவுள்ளோம்.

மாவட்ட கிளை என்ற அடிப்படையில் அனைத்து தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்களும் ஓரணியில் திரண்டு ஒற்றுமையுடன் செயல்படவுள்ளனர்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வாவின் பிறந்தநாள் நிகழ்வு மற்றும் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் உள்ளிட்ட விடயங்களை கருத்தில் கொண்டு தமிழ் அரசுக் கட்சி புது உத்வேகத்துடன் செயல்படவுள்ளது.

தமிழர்களின் ஏகோபித்த ஆதரவை பெற்ற கட்சி என்ற வகையில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமிழ் அரசுக் கட்சிக்கான ஆதரவை வழங்கி வருகின்றனர். பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றுவதற்காக அனைவரும் ஓரணியில் ஒற்றுமையாக செயல்பட வேண்டும்" வேண்டும் என்றனர்.

(ஐ)

# ஆலையடிவேம்பில் வீட்டுக்கு தீ வைப்பு!

அக்கரைப்பற்று, மார்ச் 18

கூரை வழியாக வீட்டுக்குள் நுழைந்த சிலர் அங்கிருந்த பொருட்களுக்கு தீ வைத்ததுடன், வளவில் நின்றிருந்த வாழை மரங்களையும் வெட்டிவிட்டு சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை - ஆலையடிவேம்பில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் யாருமற்ற நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் அறிந்த வீட்டின் உரிமையாளர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

(ஐ)

# வெள்ளரிப்பழத்துக்கு அம்பாறையில் கிராக்கி!

அக்கரைப்பற்று, மார்ச் 18

வறட்சியான காலநிலை காரணமாக அம்பாறையில் வெள்ளரிப்பழம் விற்பனை சூடுபிடித்துள்ளது. மக்கள் ஆர்வத்துடன், வெள்ளரிப்பழங்களை வாங்கிச் செல்கின்றனர்.

குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று பிரதேசங்களில் வெள்ளரிப்பழம் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதை காண முடிகிறது.

கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியோரங்களில் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகளில் வெள்ளரிப்பழங்களை வியாபாரிகள் விற்பனை



செய்து வருகின்றனர்.

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள உடல் உஷ்ணத்தை தணிக்கும் பொருட்டு வெள்ளரிப்பழங்கள் சாப்பிடுவதில் மக்கள் அதிக நாட்டம் கொண்டு வருகின்றனர்.

மேலும், அம்பாறை மாவட்டத்தில் வெள்ளரிப்பழத்துக்கு சிறந்த கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன், ஒரு பழம் சுமார் 300 - 1000 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ‘கிண்ணியா’ பெயர் பலகையை பல மாதங்களாக காணவில்லை!

கிண்ணியா, மார்ச் 18

கிண்ணியா- தம்பலகாமம் பிரதான வீதியின் தம்பலகாமத்துக்கு அடுத்து வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாக வைக்கப்பட்ட ‘கிண்ணியா’ எல்லையை குறிக்கும் பெயர் பலகையை பல மாதங்களாக காணவில்லை எனறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவத்தப்பாலத்தடியில் நடப்பட்டிருந்த குறித்த பெயர்ப் பலகை இன்மையால், கிண்ணியா பிரதேச எல்லையை இனங்கண்டுக்கொள்வதில், மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாக நடப்பட்ட குறித்த பெயர் பலகை பலமாத காலமாக காணாமல் போயுள்ளது.

இது தவிர புதிதாக அமைக்கப்பட்ட பல காபட் வீதிகளுக்கான முறையான பெயர் பலகையும் அமைக்கப்படவில்லை. இதனால், வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்கள் வீதிகள் தெரியாமல் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# இந்திய பாராளுமன்றத் தேர்தல் 96.8 கோடி பேர் வாக்களிக்க தகுதி!




புதுடில்லி, மார்ச் 18

**இந்தியாவின் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு சுமார் 96.8 கோடி பேர் தகுதி பெற்றுள்ளனர். இந்தியாவின் இந்தத் தேர்தல் உலகம் கண்டிராத மிகப்பெரிய தேர்தலாக இருக்கும் கருதப்படுகின்றது.**

இந்தியாவின் பொதுத் தேர்தல் ஏப்ரல் 19 ஆம் திகதி ஆரம்பமாகி மே மாதம் வரை ஏழு கட்டங்களாக நடைபெறும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தல் முடிவுகள் ஜூன் 4 ஆம் தேதி அறிவிக்கப்படும் என தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

கருத்துக் கணிப்புகள் நரேந்திர மோடியின் பாரதிய ஜனதா கட்சி மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் வெற்றி பெறும் என்று கணித்துள்ளன. இதன் மூலம் அந்தக் கட்சி மூன்றாவது முறையாக ஆட்சியைப் பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் உட்பட இருபதுக்கும் மேற்பட்ட எதிர்க்கட்சிகள், இந்தத் தேர்தலில் பா. ஜ. கவை எதிர்கொள்ள 'இந்தியா' என அழைக்கப்படும் ஒரு கூட்டணிக் குழுவை உருவாக்கியுள்ளன.

இந்திய பாராளுமன்றம் 543 உறுப்பினர்களை கொண்டது. ஆட்சி அமைப்பதற்கு 272 உறுப்பினர்கள் ஒரு கட்சிக்கு தேவை. கடந்த 2019 தேர்தலில் 303 ஆசனங்களை பா. ஜ. க. தலைமையிலான கூட்டணி பெற்றது. இம்முறை தேர்தலில் 370 ஆசனங்களையாவது கைப்பற்றுவதே தமது இலக்கு என்று பா. ஜ. கூறுகிறது. (ஐ)



**பிரிட்டிஷ் வனஉயிர் புகைப்பட விருதை வென்றுள்ளது இந்தப் பந்து ஒளிப்படம். தண்ணீரில் மிதக்கும் உதைபந்தாட்டத்துக்கு பயன்படுத்தப்படும் இந்தப் பந்தின் கீழ் தண்ணீருக்குள் உயிரினக் குடியிருப்பு காணப்படுகின்றது. இந்த ஒளிப்படம் இது கடலில் அதிக குப்பைகளை காட்டுவதுடன், நமது கரையில் ஆக்கிரமிப்பு உயிரனங்களின் அபாயத்தையும் எச்சரிக்கிறது.**



# உக்ரைன் மீது ரஷ்யா 'வேகுவம்' குண்டு வீச்சு

மொஸ்கோ, மார்ச் 18

உக்ரைன் மீது பிராண வாயுவை ஈர்த்து வெடிக்கும் வேகுவம் வகை குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் 300இற்கும் மேற்பட்ட ரஷ்ய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் போர் இரு வருடங்களை கடந்து நீடிக்கிறது. இந்நிலையில், ரஷ்ய இராணுவம் சனிக்கிழமை வெளியிட்ட செய்தியில், 'வேகுவம்' வகை குண்டுகளை வீசி எண்ணற்ற படையினரை கொன்றுள்ளோம் என்று கூறியுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வேகுவம் வகை குண்டுகள் அந்த சூழலில் உள்ள பிராண வாயுவை (ஒட்சிசன்) ஈர்த்து வெடிக்கும். இது பேரழிவை ஏற்படுத்தும். உடல் உறுப்புகள் சிதைவுக்கு உள்ளாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா நடத்திய தாக்குதலில் உக்ரைனின் 300 படையினர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் இந்தத் தாக்குதல் துல்லியமாக இலக்கு வைத்து நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காசாவின் ரபா நகரத்தை தாக்க இஸ்ரேல் திட்டம்!

## -வான் வழி தாக்குதலில் 36 பேர் பலி-

*காசா, மார்ச் 18*

*காசாவின் ரபா நகரில் சிக்கியுள்ள 15 இலட்சம் பலஸ்தீனர்களை வெளியேற்றிவிட்டு தரை வழித் தாக்குதலை நடத்தும் திட்டத்துக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஒப்புதல் அளித்துள்ளார்.*

*இந்தத் திட்டத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை, ஜேர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. அமெரிக்காவும்கூட எச்சரிக்கை விடும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளது.*

*இதனிடையே, காசாவின் மத்திய பகுதியில் நசீரத் நகரில் இஸ்ரேல் படையினர் நேற்று முன்தினம் நடத்திய வான்வழி தாக்குதலில் 36 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். அகதி முகாம் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.*



*ஹமாஸ் அமைப்பு கடந்த ஆண்டு ஒக்ரோபரில் இஸ்ரேலுக்குள் புகுந்து நடத்திய தாக்குதலில் ஆயிரத்து 139 பேர் உயிரிழந்தனர். 250இற்கும் மேற்பட்டவர்கள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.*

*இதைத் தொடர்ந்து காசா மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கையில் 31 ஆயிரத்து 533 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். 73 ஆயிரத்து 546 பேர் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

# ஐஸ்லாந்தில் மீண்டும் எரிமலை வெடித்தது!

*ரெய்க்ஜவிக், மார்ச் 18*

*ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் மற்றோர் எரிமலை வெடித்ததால் தெற்கு ஐஸ்லாந்தில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. டிசெம்பர் முதல் இது நான்காவது எரிமலை வெடிப்பு ஆகும்.*

*இது, இதுவரை ஏற்பட்ட மிக சக்திவாய்ந்த எரிமலை வெடிப்பாகக் கருதப்படுகின்றது. நெருப்பு குழம்புகள் பரவி வரும் கிரின்டாவிக் நகரத்தை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேநேரம், எரிமலை நெருப்பு குழம்பு கடல்நீருடன் கலந்தால் ஆபத்தான வாயுக்கள் மற்றும் சிறிய வெடிப்புகள் ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.*

*எரிமலை குழம்பு வெடிப்பை அடுத்து 500 -600 பேர் வரை வெளியேற்றப்பட்டுள்ளனர். முன்னதாக இந்த நகரத்தில் இருந்த 4 ஆயிரம் குடியிருப்பாளர்கள் இடம்பெயர்ந்து ஒரு மாதத்துக்கு முன்னரே மீண்டும் குடியேறியிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.*

*ஐஸ்லாந்தில் 33 எரிமலைகள் செயல்நிலையில் உள்ளன. 2021ஆம் ஆண்டின் பின்னர் இது7ஆவது எரிமலை வெடிப்பாகும். கிரின்டாவிக் பகுதி புதிய எரிமலை சகாப்தத்தில் நுழைகிறது. இங்கு எரிமலை வெடிப்பு பல தசாப்தங்களுக்கு நீடிக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.* (ஐ)



# இனவாதிகள், மதவாதிகளுக்கு எமது கூட்டணியில் இடமில்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 18

**இனவாதிகள் மற்றும் மதவாதிகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இடமில்லை என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.**

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், "இந்நாட்டில் பரந்தப்பட்ட அரசியல் கூட்டணியை உருவாக்குவோம். பலர் எம்முடன் இணைந்துள்ளனர். அனைத்து கட்சிகளில் இருந்தும் வருகின்றனர். சிவில் அமைப்புகளும் இணைந்துள்ளன. மேலும் பல தரப்பினரும் பேச்சு நடத்தி வருகின்றனர். ஊழல்வாதிகள், மோசடிக்காரர்கள், இனவாதிகள் மற்றும் மதவாதிகளுக்கு



கூட்டணியில் இடமில்லை. இந்நாட்டில் உருவான மிகப் பெரிய கூட்டணியாக எமது கூட்டணி அமையும்." - என்றார்.

(ஐ)

# இலங்கையர் உட்பட 158 பேர் மலேசியாவில் கைதாகினர்!

கோலாலம்பூர், மார்ச் 18

மலேசியாவில் அடுக்கு மாடி குடியிருப்பில் சட்டவிரோதமாக தங்கியிருந்த இலங்கையர்கள் உட்பட 158 பேர் கைது செய்யப்பட்டனர் என்று அந்த நாட்டின் குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

மலேசிய குடிவரவு - குடியகல்வு பிரிவு நடத்திய விசேட நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த சோதனை நடவடிக்கையின்போது, வெளிநாடுகளைச் சேர்ந்த 358 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் 158 பேருக்கு மலேசியாவில் தங்குவதற்கான வீஸா இல்லை. இதையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில், 83 ஆண்கள், 54 பெண்கள், 8 சிறுவர்கள் அடங்குவர்.

கைதானவர்களில் இலங்கையர்கள் தவிர, இந்தோனேசியா, நேபாளம், மியன்மார், பங்களாதேஷ், சீனா, பாகிஸ்தான் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலா வீசாவில் சென்று தொழில்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை மலேசிய குடிவரவு - குடியகல்வு திணைக்களம் நடத்தி வருகின்றது.

(ஐ)



# திறந்த பார்வை தளம் கொண்ட ரயில் பெட்டி உருவாக்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 18

புகையிரதத் திணைக்களம் திறந்த பார்வை தளம் கொண்ட ரயில் பெட்டியை உருவாக்கியுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மலையகத்தின் இயற்கைக் காட்சிகளை ரசிக்க ஏதுவாக இந்த ரயில் பெட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. முற்றிலும் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட இந்த ரயில் பெட்டி மலையக ரயில் சேவையில் எதிர்காலத்தில் சேர்க்கப்படும். பாவனையில் இல்லாத பழைய ரோமானிய புகையிரத பெட்டியே இவ்வாறு புதிய பார்வைத் தளமாக மாற்றப்பட்டுள்ளது. இதற்கு 3 கோடி ரூபாய் செலவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# வட்டுக்கோட்டை இளைஞர் கொலை; மனித உரிமைகள் குழுவும் விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 18

வட்டுக்கோட்டை பொன்னாலை கடற்படை முகாமுக்கு அருகாமையில் தம்பதி கடத்தப்பட்டு கணவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கடற்படையினரின் செயல்பாடுகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய பணிமனையால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொலை செய்யப்பட்ட குடும்பஸ்தரும் அவரது மனைவியும் காரைநகரில் இருந்து வட்டுக்கோட்டை - மாவடியில் உள்ள வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தவேளை பொன்னாலை கடற்படை முகாமுக்கு அருகாமையில் காரில் ஆயுதங்களுடன் நின்ற சிலர் அவர்களை வழிமறித்தனர்.

இதன்போது இருவரும் தப்பித்து கடற்படை முகாமுக்குள் உள்நுழைந்தனர். கடற்படையினர் அவர்களை வெளியே விரட்டினர். இதனால் அவர்கள் வெளியே வந்தவேளை, ஒரு காரில் மனைவியையும், அடுத்த காரில் குறித்த நபரையும் ஏற்றிக்கொண்டு குறித்த குழு அங்கிருந்து சென்றது.

பின்னர் மனைவியை சித்தங்கேணி சந்தியில் இறக்கிவிட்டனர். அதன்பின்னர் மனைவி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

இந்நிலையில், குறித்த நபரை கடத்திச் சென்றவர்கள் அவர் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்ட பின்னர் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவ மனையில் உள்ள மாமரத்துக்கு கீழே அவரை தூக்கி வீசிவிட்டு சென்றனர்.

இந்நிலையில், தனது கணவர் கடத்திக் கொலை செய்வதற்கு கடற்படையினரும் ஒரு வகையில் காரணம் என கொலை செய்யப்பட்டவரின் மனைவி குற்றம் சாட்டியநிலையில், இளைஞனை கடத்துவதற்கு கடற்படையினர் உதவும் சி.சி.ரி.வி காட்சிகள் சில தினங்களுக்கு முன்னர் வெளியாகின.

இந்நிலையில் வியாழக்கிழமை குறித்த கடற்படை முகாமுக்கு சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய உத்தியோகத்தர்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ்,

ஊடகங்களில் வெளியாகிய செய்திகள் மற்றும் காணொலிகளின் அடிப்படையில் கடற்படையினரின் செயல்பாடுகள் தொடர்பில் அறிக்கை கேட்டுள்ளோம். அதுமட்டுமல்லாது குறித்த இளைஞனின் கொலை தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பிலும் விரிவான அறிக்கை கேட்டுள்ளோம் -என்றார்.

(அ-ஐ)

# அரசியல் வெறுத்துவிட்டது

## சந்திரிகா அம்மையார் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 18

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையை நான் வெறுக்கிறேன் - அரசியல் வெறுத்து விட்டது என்று கூறியிருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில் சந்திரிகா பங்கேற்றார். இதன்போது, செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டபோதும் பின்னர் அரசியில் நிகழ்வு எதிலும் பங்கேற்காதது ஏன் என்று சந்திரிகாவிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்,

நாட்டின் அரசியலின் தற்போதைய நிலையை நான் வெறுக்கிறேன் - அரசியல் வெறுத்துவிட்



டது. அரசியல் தொடர்பில் கருத்து வெளியிட எதுவும் இல்லை - என்று அவர் கூறியுள்ளார்.

(ஐ)

# ஒருநாளில் ஆயிரம் கருக்கலைப்புகள்!

கொழும்பு, மார்ச் 18

இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் ஆயிரம் கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன என்று பிரித்தானியாவின் லேன்ட்செட் மருத்துவ சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

நாட்டில் சமூக பாதுகாப்பு நிலைமை வீழ்ச்சியடைந்ததால் இவ்வாறு அதிகளவு கருக்கலைப்புகள் பதிவாகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை, பல்கலைக்கழக மாணவியர், திருமணமாகாத பெண்கள், திருமணமான பெண்கள் உள்ளிட்டவர்கள் இவ்வாறு கருக்கலைப்பு செய்கின்றனர் என்று ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது என நிபுணத்துவ மருத்துவர் ஜீ. ஜீ. சமால் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமூகப் பாதுகாப்பு நிலைமைகளில் காணப்படும் குறைபாடு காரணமாக பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகும் சிறுமியரின் எண்ணிக்கை அதிகம் என தெரிவித்துள்ளார்.

பால்வினை நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்த பால்வினை நோயகளுக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய மருத்துவர்கள் பலர் வெளிநாடு சென்றுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# டெங்கு நோயால் இரு மாதங்களில் 2 பேர் மரணம் 18,556 பேர் பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 18

கடந்த இரண்டு மாதங்களில் டெங்கு நோயால் 7 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 18 ஆயிரத்து 556 டெங்கு நோயாளர்கள் பதிவாகினர் என்று தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்தில் கடந்த 15 நாள்களில் மாத்திரம் 2 ஆயிரத்து 132 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# காலி துப்பாக்கிச்சூடு 2 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 18

காலியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி - எல்பிட்டி - பிடிகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருவல பிரதேசத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடனேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். 35 வயதுடைய இருவரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில் ஒருவர் தாக்குதலுக்கு திட்டமிட்டவர் என்றும் மற்றவர் தாக்குதலுக்கு உதவியவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 11ஆம் திகதி இரவு காலி - எல்பிட்டியில் நடத்திய துப்பாக்கி சூட்டில் இருவர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர். அன்றைய தினம் தென்னிலங்கையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 6 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## விளையாட்டு...

பல பகுதிகளில் அதிக வெப்ப காலநிலை நிலவுகிறது.

இதன்படி மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கொழும்பு, கம்பஹா, மொனராகலை, மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் அதிக வெப்பமான காலநிலை நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## போரால்...

அதிகாரிகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு சென்றபோது மாவட்ட செயலாளர், பிரதேச செயலா ளர், பல்கலைக்கழக சமூகம், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்ற வரையறுக்கப்பட்ட சில தரப்பினருடன் மாத்திரமே சந்திப்புகளில் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட தரப்பினருடனான பரந்துபட்ட சந்திப்புகளில் இன்னமும் ஈடுபடவில்லை.

"உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நிறுவப்பட்ட தன் பின்னர் அதில் முன்னிலையாகும் தரப்பினர் கையாளப்படவேண்டிய முறை உள்ளிட்ட ஒழுங்கு விதிகளை நாம் இப்போது தயாரித்து வருகின்றோம். அதேபோன்று வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளடங்கலாக நாம் சந்திக்கவேண்டிய பாதிக்கப்பட்ட தரப்பினர் குறித்த தகவல்களைத் திரட்டி வருகின்றோம். அந்தத் தகவல்களை மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், அரச சார்பற்ற அமைப்புகளின் செயலகம், மக்கள் பேரவை போன்ற கட்டமைப் புக்களின் ஊடாக சேகரிக்கின்றோம். பாதிக்கப்பட்ட தரப்பினருடன் தனிப் பட்ட ரீதியில் தொடர்புகளை பேணி வந்திருந்தாலும், முறையாக ஒழுங்க மைக்கப்பட்ட கட்டமைப்பு ரீதியிலான சந்திப்புகள் இந்த மாத இறுதியில் அல்லது எதிர்வரும் ஏப்ரல் மாத தொடக்கத்தில் ஆரம்பமாகும் - என்றும் கூறினார். (ஐ)

## தெற்காசிய...

உலகளாவிய ரீதியில் மனித மேம்பாட்டில் (அபிவிருத்தி) நிலவும் முன்னேற்றம் மற்றும் ஏற்றத்தாழ்வுகளை வெளிக்கொணரும் வகையில் 2023 / 2024ஆம் ஆண்டுக்கான மனித மேம்பாட்டு அறிக்கை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயல் திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

மனித மேம்பாட்டை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் பிரதான கூறுகளில் 2022ஆம் ஆண்டில் அடையப்பட்டுள்ள முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்ட மனித மேம்பாட்டு சுட்டெண் பிரகாரமே இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த சுட்டெண்ணானது பொருளாதார வளர்ச்சிக்கு அப்பால் மக்களுக்கும், அவர்களது இயலுமைகளுக்கும் முன்னுரிமை அளிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. இது நீண்டகால ஆரோக்கியமான வாழ்க்கை, போதிய அறிவு, சீரான வாழ்க்கைத்தரம் ஆகிய மூன்று பிரதான கூறுகளை உள்ளடக்கினது. இதற்கமைய "மிக உயர்வான மனித மேம்பாடு" எனும் அளவுகோலில் தெற்காசிய பிராந்தியத்தில் அமைந்துள்ள எந்தவொரு நாடும் உள்ளடக்கப்படவில்லை. இருப்பினும் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் அதற்கு அடுத்த நிலையான "உயர்வான மனித மேம்பாடு" எனும் அளவுகோலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இதேபோன்று தெற்காசியாவின் இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் மற்றும் மியன்மார் என்பன "நடுத்தர மனித மேம்பாடு" எனும் அளவுகோலிலும், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் என்பன "மிகக் குறைந்த மனித மேம்பாடு" எனும் அளவுகோலிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஐ)

## இராணுவ...

நகர்வாக கருதப்படுகிறது.

சீனாவுடன் "இராணுவ உதவி" ஒப்பந்தத்தில் மாலைதீவு கடந்த வாரத்தில் கைச்சாத்திட்டிருந்தது. மறுபுறம் மாலைதீவில் மூலோபாய தீவுக்கூட் டத்தில் நிலைகொண்டிருந்த இந்திய படைகளை வெளியேற உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, இலங்கை, நேபாளத்துக்கு செல்வதற்கு முன்னர் இந்த உயர்மட்ட இராணுவ குழு சீன சார்பு மாலைதீவு ஜனாதிபதியான மொஹமட் முய்சுவை சந்தித்துள்ளது. இதனை, பீஜிங் பெய்ஜிங் கடந்த புதன்கிழமை உறுதி செய்தது.

இவ்வாறானநிலையில் குறித்த மூன்று நாடுகளிலும் இராணுவ உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் பிராந்திய பாதுகாப்பு பிரச்னைகள் பற்றிய விடயங்கள் தொடர்பில் கருத்துகளை பரிமாறவும் இதேநேரத்தில், சீன இராணுவத்தின் சர்வதேச இராணுவ ஒத்துழைப்புத் துறையின் அதிகாரிகளின் பிரதிநிதிகள் குழு இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது பற்றிய ஆழமான ஆலோசனைகளில் கவனம் செலுத்தியுள்ளது.

இந்து சமுத்திரத்தில் இலங்கையில் சீனாவின் வளர்ந்து வரும் இருப்பு மற்றும் மாலைதீவில் அதன் செல்வாக்கு ஆகியவற்றில் இந்தியா சந்தேகம் கொள்கிறது. அத்துடன், கிழக்கு - மேற்கு சர்வதேச கப்பல் வழித்தடத்தில் இந்தத் தெற்காசிய தீவு நாடுகள் இரண்டுமே மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்றன.

பீஜிங் நேபாளத்துடனும் நெருங்கிய உறவை கொண்டுள்ளது. எனவே, இந்து சமுத்திரம் நோக்கிய சீனாவின் எதிர்கால பார்வையின் முக்கிய நகர்வாகவே சீன இராணுவ குழுவின் இந்தப் பயணம் கருதப்படுகின்றது. (ஐ)

## ஐ.தே.கட்சியின்...

நியமித்திருந்தார்.

இந்த குழுவில் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, ஹரின் பெர்னாண்டோ, டிரான் அலஸ், மனுஷ நாணயக்கார ஆகியோரும், பாராளுமன்ற உறுப்பினர்களான மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் நிமல் லான்சா ஆகியோரும் சேர்க்கப்பட்டனர்.

இதனைத் தவிர, ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க, ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அரசாங்க தகவல் தினைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன ஆகியோரையும் தேர்தல் செயலாற்றுகை குழுவில் ஜனாதிபதி உள்ளடக்கினார்.

இந்த குழுவானது உத்தேச தேர்தலை கவனத்தில் கொண்டு பிரசாரம் மற்றும் கூட்டணி உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறானதொரு நிலையில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் ரவி கருணாநாயக்க தலைமையிலான குழு தேர்தல் கூட்டணியை உருவாக்கும் பணிகளில் தீவிரமாக செயல்பட்டு பல அரசியல் தரப்புகளுடன் பேச்சுகளை முன்னெடுத்திருந்தது. ஏற்கனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்திருந்த அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் நிமல் லான்சா தலைமையிலான குழுவுக்கும் ஐ. தே. க. தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுகள் வெற்றியளித்துள்ளன

இதேவேளை தேர்தல் செயலாற்றுகை குழுவால் பரிந்துரைக்கப்பட்ட தேர்தல் கூட்டணியின் பெயர் மற்றும் சின்னம் தொடர்பிலும் இரு தரப்புக்கும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

மேலும், குறித்த சின்னம் மற்றும் கூட்டணியின் பெயர் தொடர்பில் தேர்தல் செயலாற்றுகை குழுவின் உறுப்பினரான அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக, ஜனாதிபதி ரணிலிடம் விளக்கமளித்துள்ளார். (ஐ)

# வெப்பநிலை இன்று மேலும் அதிகரிக்கும்

கொழும்பு, மார்ச் 18

நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை இன்று திங்கட்கிழமை கவனத்துக்குரிய மட்டத்துக்கு மேலும் அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, மன்னார், வவுனியா, மொனராகலை, இரத்தினபுரி மாவட்டங்களிலும் கிழக்கு, வடமேற்கு, வடமத்திய, மேல் மாகாணங்களிலும் மனித உடலால் உணரப்படும் வெப்பம் கவனத்துக்குரிய அளவில் இருக்கும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, போதியளவு தண்ணீர் அருந்துதல், நிழலான பகுதிகளில் இயன்றவரை ஓய்வெடுத்தல், கடுமையான வெளிச் செயல்பாடுகளை கட்டுப்படுத்துதல் போன்ற சுகாதார ஆலோசனைகளை மக்கள் பின்பற்ற வேண்டும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நாட்டை பீடித்துள்ள போதையை ஒழிப்பதற்காக ஒன்றிணைவோம்

### விசேட அதிரடி படையின் கட்டளை அதிகாரி



கிளிநொச்சி, மார்ச் 18

எமது நாட்டை பீடித்துள்ள போதை நோய்க்கு இனம், மதம், மொழி தெரியாது. இதனை ஒழிப்பதற்கு அனைவரும் இணைந்து ஒத்துழைக்க வேண்டும் என்று விசேட அதிரடிப்படையின் கட்டளை பிரதானி பிரதி பொலிஸ் மா அதிபர் விருண ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடந்த சமுதாய குழுக்களை தெளிவூட்டும் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுக்திய நடவடிக்கையில் விசேட அதிரடிப் படையின் பங்கு முக்கியமானது. கடந்த வருடம் டிசெம்பர் 17 அன்று குறித்த பணி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நாட்டில் விசேட அதிரடிப் படை இந்த பணியில் மட்டும் ஈடுபடவில்லை. 30 வருட கால யுத்தத்தின் போது இராணுவத்துக்கு ஒத்துழைப்பாக இருந்தது.

மக்கள் என்பது பொலிஸ் - பொலிஸ் என்பது மக்கள். தற்போது எமது நாட்டில் போதை எனும் நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த போதை நோய்க்கு தமிழ், சிங்களம், முஸ்லிம், கத்தோலிக்கம் என வேறுபடுத்த தெரியாது. பலர் போதைக்கு அடிமையாகியுள்ளனர். அதனால்தான் முதலில் அடையாளம் காணப்பட்ட வியாபாரிகளை அகற்ற நடவடிக்கை பொலிஸ்மா அதிபரால் மேற்கொள்ளப்பட்டது.

ஆகையால், இந்த வெற்றி பயணத்தை தொடர்வதற்காகவும், போதைப் பொருளை முழுமையாக கட்டுப்படுத்துவதற்காகவும் பொதுமக்களான தங்களின் பங்களிப்பு அவசியம் என கூறுகின்றோம். எமக்கு உதவ முன்வர வேண்டும் என அழைக்கின்றோம்.

உங்களால் தரப்படும் அத்தனை தகவல்களும் இரகசியமாக பேணப்படும். உங்களை யாரும் அடையாளம் காணாத வகையில் உறுதி செய்வோம். உங்கள் தொலைபேசி அழைப்பை யாரும் பார்வையிட முடியாது. எந்த சந்தர்ப்பத்திலும் உங்களை அடையாளப்படுத்த வேண்டியதில்லை.

வன்னி மக்களாகிய நீங்கள் எம்முடன் இணைந்து பலத்தை நிரூபித்துள்ளீர்கள். சிங்களம், தமிழ் என இன வேறுபாடின்றி பொலிஸாருடன் இணைந்து இந்த பணியை நிறைவேற்ற ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ஐ)

## திடீரென்று...

தொடர்ந்து அயல் வீட்டுக்கு சென்ற பின்னர் வீட்டுக்கு திரும்பினார் எனவும் ஆனால், அவர் வீட்டின் வாசலிலேயே விழுந்து உயிரிழந்தார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இளம்...

நிலையில் மனைவியை சித்தங்கேணியில் இறக்கிவிட்டு வாகனம் சென்றது.

இதேநேரம் மற்றொரு காரில் கடத்தப்பட்ட கணவர் வெட்டுக் காயங்களுடன் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் மரத்தின் கீழ் தூக்கி வீசப்பட்டார். அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தபோதும் அவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் 12ஆம் திகதி கிளிநொச்சியில் 4 சந்தேகநபர்களும் 13ஆம் திகதி ஒரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட ஆறாவது சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, இளைஞன் கடத்தப்படும் போது கடற்படை முகாமில் இருந்த 4 கடற்படையினரிடம் பொலிஸார் வாக்குமூலங்களை பெற்றுள்ளனர் என்றும் தெரியவருகின்றது. (ஐ)

## ஜனாதிபதி...

வழங்கிய வாக்குமூலங்கள் அடங்கிய பக்கங்களை அரசு எங்களிடம் தரவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக வழங்க வேண்டும் என நாங்கள் பலமுறை கடிதங்களை எழுதிய பிறகு அரசாங்கம் ஆறு இறுவட்டுகளை வழங்கியது.

அமைச்சர்கள், அதிகாரிகள் 99 வீத விசாரணைகள் முடிவடைந்துவிட்டன எனத் தெரிவிக்கின்றனர். எனினும் நாங்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகளை ஆராய்ந்தவேளை அது உண்மையில்லை என்பதை உணரமுடிந்தது.

சஹ்ரானை அவரின் குழுவை சேர்ந்தவர்களை தெரிந்த 23 முஸ்லிம்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் குறித்த அனைத்து விடயங்களையும் விசாரணை செய்வதை தவிர்த்துள்ள அரசாங்கம் தற்போது இவர்களை பலிகடாக்களாக்க முயல்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று இந்த வருடத்துடன் ஐந்து வருடங்களாகின்றன. நாங்கள் புதிய சுயாதீன விசாரணைகளை கோரிவரும் நிலையில் அதிகாரிகள் பொதுமக்களை தவறாக வழிநடத்தும் திட்டங்களை முன்வைக்கின்றனர்.

இதேசமயம், ஆசாத் மௌலானா போன்றவர்கள் வெளியிட்ட தகவல்கள் மூலம் வெளியான புதிய ஆதாரங்கள் குறித்து எந்த விசாரணைகளும் இடம்பெறவில்லை - என்றும் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பாலியல் உறவுக்கு சம்மதிக்கும் வயது 14; சட்டத் திருத்தத்துக்கு கடும் எதிர்ப்புகள்!

## 150 சிவில் பிரதிநிதிகள், 55 அமைப்புகள் கூட்டாக முன்வைப்பு

கொழும்பு, மார்ச் 18

**பாலியல் உறவுக்கு சம்மதிக்கும் வயதை 16இல் இருந்து 14ஆகக் குறைக்கும் சட்டத் திருத்தத்துக்கு சிவில் சமூகப் பிரதிநிதிகள், 55 சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சிறுமிகள் உள்ளடங்கலாக வயது குறைந்த பிள்ளைகளுக்கு எதிராக அதிகரித்துவரும் பாலியல் வன்முறைகளை நெறிமுறைப்படுத்துவதுடன், தண்டனை விலக்கீட்டு கலாசாரத்தை ஊக்குவிக்கக்கூடிய வகையில் பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் குற்றங்கள் தொடர்பான சட்டத்தில் மேற்கொள்வதற்கென முன்வைக்கப்பட்டிருக்கும் திருத்த முன்மொழிவுகளை அரசாங்கம் உடனடியாக மீளப்பெறவேண்டும்.

வன்புணர்வு மற்றும் பாலியல் குற்றங்கள் தொடர்பான சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சட்ட வரைவு தொடர்பில் எதிர்ப்பை வெளிப்படுத்தியும் அதனை உடனடியாக மீளப்பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியும் பேராசிரியர் சாவித்திரி குணசேகர உள்ளடங்கலாக 150 தனிநபர்களும், சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான நிலையம், பெண்கள் ஆய்வு நிலையம், வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு என்பன உள்ளடங்கலாக 55 சிவில் சமூக அமைப்புகளும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

1995ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட தண்டனை சட்டக்கோவையானது 18 வயதை அடையாத பிள்ளையொன்று பாலியல் உறவில் ஈடுபடுவதற்குரிய சம்மதத்தை அளிப்பதற்கான தகைமை வயதெல்லை 16 எனக் கூறுகின்றது.

இதன்படி, பாலியல் உறவுக்கு சம்மதம் அளிக்கும் வயதெல்லையை அடையாத சிறுமியுடன் பாலியல் உறவில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றமாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சம்மதம் அளிக்கக்கூடிய தகைமை வயதெல்லையை 16இல் இருந்து 14ஆகக் குறைப்பதற்கு இத்திருத்தச் சட்ட வரைவு முன்மொழிந்திருப்பதை ஏற்கமுடியாது.

இந்த முன்மொழிவானது நாட்டில் சிறுமிகள் உள்ளடங்கலாக வயது குறைந்த பிள்ளைகளுக்கு எதிராக அதிகரித்துவரும் பாலியல் துன்புறுத்தல்களையும் இவ்விடயத்தில் சட்ட அமுலாக்கம் அடைந்திருக்கும் தோல்வியையும் மிகத் தெளிவாக புறக்கணித்துள்ளது.

இதேவேளை இது சிறுவர் பாலியல் துன்புறுத்தலை நெறிமுறைப்படுத்துவதுடன், தண்டனை விலக்கீட்டு கலாசாரத்தையும் ஊக்குவிக்கிறது.

மேலும், இத்தகைய பாலியல் துஷ்பிரயோகங்கள் சிறுமிகளின் ஆரோக்கியத்திலும், பொதுவான வளர்ச்சியிலும் தீவிர தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக, பருவ வயது கர்ப்பம் காரணமாக சிறுமிகள் பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலக நேரிடுவதுடன், அவர்கள் எச்.ஐ.வி உள்ளிட்ட பால்வினை நோய்களுக்கு உள்ளாகக்கூடிய அச்சுறுத்தலும் உயர்வாகக் காணப்படுகிறது.

சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வரும் பின்னணியில், நடைமுறையில் உள்ள சட்டத்தை வலுப்படுத்துவதுடன் பாலியல் துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய சூழ்நிலையில் தண்டனை சட்டத் திருத்தமாக இந்த வரைவு முன்வைக்கப்பட்டுள்ளமை ஆச்சரியம் அளிக்கிறது.

எனவே, பாலியல் குற்றங்கள் தொடர்பான சட்டத்தையும் கொள்கையையும் மாற்றக்கூடிய அவசரமானதும், எழுந்தமானமானதும், கண்டனத்துக்குரியதுமான இந்த சட்டவரைவை மீளப்பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம் - என்றுள்ளது. (ஐ)

# யானை தாக்கி குடும்பஸ்தர் பலி!

மட்டக்களப்பு, மார்ச் 18

குளத்தில் மீன் பிடிக்க சென்ற குடும்பஸ்தர் காட்டு யானை தாக்கி உயிரிழந்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு - கிரான் - குளத்துவெட்டை - திகிலிவெட்டையில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 32 வயதான இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

குளத்தில் மீன்பிடிக்க சென்றவர் வலையை கட்டிவிட்டு அணைக்கட்டில் உறங்கியவேளை யானை தாக்கி அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மகிந்த யாப்பாவையும் பெரமுன காப்பாற்றிவிடும்

## எஸ். எம். மரிக்கார் சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 18

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு பொதுஜன பெரமுன ஆதரவளிக்கும் என்று நாம் நம்பவில்லை. கெஹலிய ரம்புக்வெலவை போன்று, இவரையும் மொட்டு கட்சி காப்பாற்றிவிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொலன்னாவை மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீது செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் விவாதங்கள் முன்னெடுக்கப்பட்டு புதனன்று வாக்கெடுப்பு நடத்தப்படும். எவ்வாறிருப்பினும் பொதுஜன பெரமுனவில் உள்ளவர்கள்மீது எமக்கு துளியளவும் நம்பிக்கையில்லை.

இன்று தரக்குறைவான மருந்தைக் கொள்வனவு செய்த கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நாம் நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைத்தபோது, பொதுஜன பெரமுனவில் அனைவரும் சேர்ந்து அவரைக் காப்பாற்றினர். ஆனால், நீதித்துறை உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

அதே போன்று இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் மோசமான சபாநாயகரான இவருக்கு ஆதரவாக பொதுஜன பெரமுனவினர் வாக்களித்தால், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை - என்றார். (ஐ)

# நவக்கிரி பகுதி வீடொன்றில் மோட்டார் சைக்கிள் தீ வைப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 18

புத்தூர், நவக்கிரி பகுதியில் வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

வீட்டினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை நேற்றுமுன்தினம் அதிகாலை 1:30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் பெற்றோல் குண்டு வீசி தீயிட்டு எரித்ததுடன் வீட்டின் யன்னல்கள், கதவுகள் என்பவற்றையும் கூரிய ஆயுதங்களால் உடைத்து சேதமாக்கினர்.

வீட்டில் உள்ளவர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளை கூரிய ஆயுதங்களுடன் வந்த மூவர் தமது வீட்டை உடைத்து மோட்டார் சைக்கிளையும் தீயிட்டு எரித்தனர் என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ரணிலை ஆதரிக்காதுவிடின் மீண்டும் வரிசை யுகமே வரும்!

## இப்படி சொல்கிறார் வஜிர எம். பி.

கொழும்பு, மார்ச் 18

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலே இடம்பெறும். வெளிநாடுகளின் தேவைகளுக்காகவே சில குழுக்கள் பாராளுமன்ற தேர்தல் இடம்பெறவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்து வருகின்றனர். ஜனாதிபதி தேர்தலில் தேசிய தலைவராகவே ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார். மக்கள் அவருக்கு ஆதரவளிக்காவிட்டால் எரிபொருட்களுக்கு மீண்டும் வரிசையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டே ஆகும் என ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அரசமைப்பின் பிரகாரம் ஆரம்பமாக ஜனாதிபதி தேர்தல் இடம்பெற வேண்டும். அதன் பிரகாரம் இந்த வருடம் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதத்துக்குள் தேர்தல் இடம்பெறும். என்றாலும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தல் இடம்பெற வேண்டும் என சில குழுக்கள் தெரிவித்து வருகின்றன. அவர்கள் வெளிநாடுகளின் தேவைக்காகவே இவ்வாறு பிரசாரம் செய்து வருகின்றனர். இவர்கள் தொடர்பாக மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நாட்டில் அடுத்து இடம்பெறும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி பரந்துபட்ட கூட்டணியை அமைக்க இருக்கிறோம். அதில் ரணில் விக்கிரமசிங்க தேசிய தலைவராக தேர்தலில் போட்டியிட நடவடிக்கை எடுத்து வருகிறோம். தேசிய தலைவருக்கு மக்கள் ஆதரவளிக்காவிட்டால் எரிபொருளுக்காக மக்கள் மீண்டும் வரிசையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டே ஆகும். அந்த பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

நாட்டின் தற்போதைய நிலைமையில் அனைவரும் ஒரு தேசமாக ஒன்று திரளவேண்டும். இந்த விடயத்தில் நாங்கள் இந்தியாவை முன்மாதிரியாகக்கொள்ள வேண்டும். அவர்கள் அரசியல் ரீதியில் பிளவுபட்டிருந்தாலும் தேசம் என்று வரும் போது ஒரு கொள்கை யில் பிளவுபடாமல் இருக்கின்றனர் - என்றார்.

# அநுராதபுரத்தில் 28 வீத மாணவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 18

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களில் 28 சதவீதமானவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் அநுராதபுரம் மாவட்ட மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தாமல் இருக்கின்றனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜயந்த பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் 16 சதவீதமான பாடசாலை மாணவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரித்தானிய மருத்துவ அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களில் பெரும்பாலான மாணவர்கள் அநுராதபுரம் பிரதேசத்தில் வசிப்பவர்கள்.

நாட்டில் தற்போது காணப்படும் பொருளாதாரப் பிரச்னையால் குடும்பங்களில் ஏற்படும் வருமானமின்மையே இதற்கு முக்கிய காரணம் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# காசாவின் கண்ணீரும் தலைவர்களின் தந்திரமும்!







காசாவின் துயரம் முடிவுக்கு வரும் என்கிற நம்பிக்கையைத் தகர்க்கும் செய்திகள் மேற்கு ஆசியப் பிராந்தியத்திலிருந்து வந்தவண்ணம் இருக்கின்றன. அமெரிக்கா போன்ற வல்லரசுகள் இந்தப் பிரச்சினையில் காட்டும் இரட்டை நிலைப்பாட்டால் சிக்கல்கள் மேலும் மேலும் அதிகரிக்கும் என்றே தெரிகிறது.

இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினை பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்துவரும் நிலையில், 2023 அக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தொடர் ஏவுகணைத் தாக்குதல் - சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் பாலஸ்தீனர்கள் மீது தாக்குதல் நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் - இஸ்ரேலுக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்துவிட்டது.

காசா மீதான இஸ்ரேலின் இரக்கமற்ற தாக்குதலில், இதுவரை 31,272 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். இவர்களில் பலர் பெண்களும் குழந்தைகளும்தான் என்பது வேதனையளிக்கும் விஷயம். எஞ்சியிருப்பவர்களில் பெரும்பாலானோர் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடிக்கொண்டே இருக்கிறார்கள்.



இதற்கு மேலும் தப்பிச் செல்ல வழியில்லை என்கிற சூழலில் ரஃபா நகரில் தஞ்சமடைந்திருக்கும் பாலஸ்தீனர்களையும் விடாமல் குறிவைத்துக் கொன்றழிக்கிறது இஸ்ரேல் ராணுவம். ஒருபுறம், இஸ்ரேல் பிணைக் கைதிகளை ஹமாஸ் படையினரிடமிருந்து விடுவிக்கக் கோரி அவர்களது உறவினர்கள் போராடிவருகின்றனர். இன்னொரு பக்கம் அவர்களின் பெயரைச் சொல்லிப் பேரழிவை நிகழ்த்துகிறது இஸ்ரேல்.

இதுவரை 24 லட்சம் பேர் வீடிழந்து அகதிகளாகியிருக்கிறார்கள். உணவு, குடிநீர், உடை, மருந்துகள் என அடிப்படைத் தேவைகள் கிட்டாமல் தவிக்கின்றனர். பல குழந்தைகள் பட்டினியில் வாடி இறக்கின்றனர். உயிரோடு இருக்கும் குழந்தைகளும் உலகிலேயே மிக மோசமான ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். காசா பகுதி பஞ்சத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

ரமலான் நோன்பு திறந்த பின்னரும் போர் தொடர்வது பாலஸ்தீனர்களை இன்னும் வேதனையில் ஆழ்த்தியிருக்கிறது. போர்நிறுத்தம் தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதால், பிரச்சினை இப்போதைக்கு முடிவுக்கு வராது என்றே தெரிகிறது. ஏமனைச் சேர்ந்த ஹூதி குழுவினர் ஹைப்பர்சானிக் ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதனை செய்துபார்த்திருக்கிறார்கள்.

ஈரானின் ஆதரவுடன் செயல்படும் இக்குழுவினர், காசா மீதான இஸ்ரேலின் தொடர் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இஸ்ரேலைத் தாக்குவதுடன் செங்கடலிலும், ஏடன் வளைகுடாவிலும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்திவருகின்றனர். அந்த வகையில் காசா போர் ஏற்கெனவே அந்தப் பிராந்தியத்துக்கு வெளியே விரிவடைந்துவிட்டது.

இந்தப் பிரச்சினையை ஆரம்பம் முதல் சர்ச்சைக்குரிய வகையில் கையாண்டு வந்த அமெரிக்கா, தற்போது இஸ்ரேலின் தாக்குதலைத் தடுத்து நிறுத்த முயற்சிப்பதாகக் காட்டிக்கொள்கிறது. ஒருபுறம் இஸ்ரேலுக்கு ஆயுதங்களை அனுப்பும் அதிபர் ஜோ பைடன் அரசு, இன்னொருபுறம் பாதிக்கப்பட்ட பாலஸ்தீனர்களுக்கு உணவையும் நிவாரணப் பொருள்களையும் அனுப்புகிறது.

இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலில், பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிவாரண அமைப்பைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றதாக இஸ்ரேல் முன்வைத்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து, மேற்கத்திய நாடுகள் அந்த அமைப்புக்கு வழங்கி வந்த நிதியுதவியை நிறுத்தியிருந்தன. அது பொய்ப் புகார் எனத் தெரியவந்ததைத் தொடர்ந்து ஸ்வீடன், கனடா ஆகிய நாடுகள் நிதியுதவியை மீண்டும் வழங்க ஆரம்பித்திருக்கின்றன.

இஸ்ரேலில் அரசியல்ரீதியாகப் பின்னடைவைச் சந்தித்துவரும் நெதன்யாஹூவும், அமெரிக்க அதிபர் தேர்தலை மனதில் வைத்து பைடனும் தங்கள் செல்வாக்கை வளர்த்தெடுக்க காசாவைப் பலிகொடுக்கின்றனர். சர்வதேசச் சமூகம் ஒன்றுபட்டுக் குரல் எழுப்பும் வரையில் காசாவின் கண்ணீர் வழிந்துகொண்டே இருக்கும் என்பதே நிதர்சனம்!

# இந்தியா: 2024 பொதுத் தேர்தல்: எப்போது? எப்படி நடக்கும்?

இந்தியாவில் தற்போதைய மக்களவையின் பதவிக்காலம் ஜூன் 16ஆம் தேதியுடன் முடிவடைகிறது, அதற்கு முன்பாக புதிய மக்களவை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

மேலும் ஆந்திரா, சிக்கிம், அருணாச்சல பிரதேசம், ஒடிசா ஆகிய மாநிலங்களின் தற்போதைய சட்டசபைகளின் பதவிக்காலம் ஜூன் மாதத்தில் வெவ்வேறு தேதிகளில் முடிவடைகிறது.

நாட்டின் 18வது மக்களவைத் தேர்தலுக்கான அட்டவணையையும், நான்கு மாநில சட்டசபை தேர்தலுக்கான அட்டவணையையும் தற்போது வெளியிட்டுள்ளது இந்திய தேர்தல் ஆணையம்.

அதன்படி, 2024ஆம் ஆண்டுக்கான மக்களவைத் தேர்தல் ஏப்ரல் 19ஆம் தேதி தொடங்குகிறது. வாக்கு எண்ணிக்கை ஜூன் 4ஆம் தேதி நடைபெறும் என்று



தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 19ஆம் தேதி தொடங்கி ஜூன் 1 வரை மொத்தம் ஏழு கட்டங்களாக நடைபெறும் பொதுத் தேர்தல் வாக்குப்பதிவில் தமிழ்நாடு முழுக்கவும் முதல் கட்டத் தேர்தலில் வாக்குப்பதிவு நடைபெறும்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் சட்டப்பேரவை அல்லது மக்களவை தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வரும். அதன்படி இன்று முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

### ஏழு கட்டங்களாக வாக்குப்பதிவு

தமிழகத்தில் ஒரே கட்டமாக ஏப்ரல் 19 அன்று 39 மக்களைவை தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெறும் எனவும் என்று தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தெரிவித்தார்.

ஏப்ரல் 19 நடைபெறும் முதல் கட்ட வாக்குப் பதிவில் தமிழ்நாடு, கேரளா, தெலுங்கானா, ஆந்திர பிரதேசம், புதுச்சேரி, பஞ்சாப், குஜராத் உள்பட 22 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மீதமுள்ள இடங்களுக்கு ஆறு கட்டங்களாக தேர்தல் நடைபெறும். இரண்டாம் கட்டம் ஏப்ரல் 26 அன்றும், மூன்றாம் கட்டம் மே 7 அன்றும், நான்காம் கட்டம் மே 13, ஐந்தாம் கட்ட வாக்குப் பதிவு மே 20 அன்றும், ஆறாம் கட்டம் மே 25 அன்றும், இறுதியாக ஏழாம் கட்ட வாக்குப் பதிவு ஜூன் 1 அன்றும் நடைபெறும்.

பின்னர் வாக்கு எண்ணிக்கை ஜூன் 4 அன்று நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதில் குறிப்பாக கர்நாடகா மற்றும் மணிப்பூர் மாநிலங்களுக்கு இரண்டாம் கட்டத்திலும், ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு ஐந்தாம் கட்டத்திலும், நாட்டின் அதிக தொகுதிகளைக் கொண்ட மாநிலமான உத்தர பிரதேசத்திற்கு ஏழாம் கட்டத்திலும் வாக்குப் பதிவுகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### 97 கோடி வாக்காளர்கள்

“2024 மக்களவைத் தேர்தலில் 10.5 லட்சம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும், அதில் 55 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. அதிகாரிகள், ஊழியர்கள், காவலர்கள் என 1.5 கோடி பேர் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்” எனக் கூறினார் தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார்.

தொடர்ந்து பேசிய அவர், “இந்த தேர்தலில் 97 கோடி மக்கள் வாக்களிக்கப் போகிறார்கள். இதில் பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 47.15 கோடி. மேலும் 1.82 கோடி வாக்காளர்கள் முதல்முறையாக வாக்களிக்க உள்ளனர். 21 முதல் 30 வயதுக்குட்பட்ட வாக்காளர்கள் 19.7 கோடி பேர். மேலும் 82 லட்சம் வாக்காளர்கள் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

85 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் 40 சதவீத குறை



பாடுகள் கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் வீட்டிலிருந்தே வாக்களிக்க வசதிகள் செய்து தரப்படும்” என தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒருமுறை இந்தியாவின் 543 தொகுதிகளுக்கும் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படும் மக்களவைத் தேர்தல் மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழாவாகப் பார்க்கப்படுகிறது.

தேர்தல் தேதி இன்று அறிவிக்கப்பட்டதால், இந்திய அரசியல் களத்தில் கட்சிகளின் அனல் பறக்கும் பிரசாரங்கள் விரைவில் தொடங்கிவிடும்.

தொகுதிகளின் அடிப்படையில், உத்தர பிரதேசத்தில் அதிகபட்சமாக 80 தொகுதிகளும், மகாராஷ்டிராவில் 48, மேற்கு வங்கத்தில் 42, பிகாரில் 40 மற்றும் தமிழ்நாட்டில் 39 தொகுதிகளும் உள்ளன.

இந்தத் தேர்தலில் பாரதிய ஜனதா, காங்கிரஸ், சிபிஎம், பகுஜன் சமாஜ், தேசிய மக்கள் கட்சி (வடகிழக்கில் பி.ஏ.சங்மாவால் தொடங்கப்பட்டது, வடகிழக்கில் தேசியக் கட்சி என்ற அந்தஸ்தை பெற்ற முதல் கட்சி) ஆம் ஆத்மி என ஆறு தேசியக் கட்சிகள் தேர்தல் களத்தில் உள்ளனர்.

### என்டிஏ கூட்டணி எதிர் இந்தியா கூட்டணி

இந்தத் தேர்தல், நரேந்திர மோதி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் (என்டிஏ) இந்தியா பிளாக் கூட்டணிக்கும் இடையிலான போட்டியாகத் தான் பார்க்கப்படுகிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணி





மூன்றாவது முறையாக நரேந்திர மோதியின் தலைமையில் தேர்தலில் போட்டியிடுகிறது, அதே நேரத்தில் இந்தியா கூட்டணி அத்தகைய ஒற்றைத் தலைமைக்கு உடன்படவில்லை.

தேசியக் கட்சிகளில், பகுஜன் சமாஜ் கட்சியைத் தவிர, அனைத்துக் கட்சிகளும் ஏதோ ஒரு கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.

பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் பிஏ சங்கமாவின் தேசிய மக்கள் கட்சி, நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம், சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம், ஏக்நாத் ஷிண்டேவின் சிவசேனா, அஜித் பவாரின் என்சிபி, ஜெயந்த் சவுத்ரியின் ராஷ்ட்ரிய லோக் தளம் மற்றும் எச்டி தேவகவுடாவின் ஜனதா தளம் ஆகியவை அடங்கும்.

இந்தியா கூட்டணியில், காங்கிரஸ் தவிர, இடதுசாரிக் கட்சிகள், லாலு பிரசாத் யாதவின் ராஷ்ட்ரிய ஜனதா தளம், அகிலேஷ் யாதவின் சமாஜ்வாதி, திமுக, ஹேமந்த் சோரனின் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா, உத்தவ் தாக்கரே குழுவின் சிவசேனா, சரத் பவாரின் என்சிபி, ஆம் ஆத்மி கட்சி உட்பட சுமார் இரண்டு டஜன் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ், மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி, நவீன் பட்நா



யக்கின் பிஜூ ஜனதா தளம் ஆகிய கட்சிகள் கூட்டணி குறித்த தெளிவான அறிவிப்புகளை இதுவரை வெளியிடவில்லை.

### 17வது மக்களவையின் முக்கிய நிகழ்வுகள்

கடந்த 2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் சுமார் 90 கோடி மக்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தனர். 2014 பொதுத் தேர்தலுடன் ஒப்பிடுகையில், 8 கோடியே 43 லட்சம் புதிய வாக்காளர்களுக்கு தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த வாய்ப்பு கிடைத்தது.

இருப்பினும், சுமார் 69.40 கோடி வாக்காளர்கள் மட்டுமே தேர்தலில் வாக்களித்தனர். இதில் 45 சதவீத வாக்குகளை என்டிஏ கூட்டணியும், சுமார் 26 சதவீத வாக்குகளை காங்கிரஸ் தலைமையிலான யுபிஏ கூட்டணியும் பெற்றது.

இதில் 17வது மக்களவையின் மிகவும் சிறப்பு வாய்ந்த விஷயம் என்னவென்றால், 78 பெண்கள் மக்களவைக்கு தேர்வு செய்யப்பட்டனர். சுதந்திரத்திற்குப் பிறகு அமைக்கப்பட்ட மக்களவைகளில் அதிக எண்ணிக்கையிலான பெண் உறுப்பினர்கள் கொண்ட அவை இதுதான்.

இது தவிர, 2019ஆம் ஆண்டில், 267 உறுப்பினர்கள் முதல் முறையாக மக்களவைக்கு தேர்வு செய்யப்பட்டனர். அதேநேரம் 475 எம்.பி.க்கள் ரூபாய் 1 கோடிக்கு மேல் சொத்து வைத்திருந்தனர். 17வது மக்களவையின் எம்.பி.க்களின் சராசரி சொத்து மதிப்பு ரூபாய் 20 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டது. 17வது மக்களவையின்போது, 16 சதவீத மசோதாக்கள் மட்டுமே, நாடாளுமன்ற குழுக்களுக்கு அனுப்பப்பட்டன. பாதிக்கு மேற்பட்ட மசோதாக்கள், இரண்டு மணி நேர விவாதத்தில் நிறைவேற்றப்பட்டன.

கடந்த ஐந்து ஆண்டுகளில், ஒவ்வோர் ஆண்டும் சராசரியாக 55 நாட்கள் மட்டுமே நாடாளுமன்றம் செயல்பட்டுள்ளது.

மணிப்பூரில் நடந்த வன்முறை விவகாரம் தொடர்பாகப் பலமுறை மக்களவை ஒத்தி வைக்கப்பட்டது. நாடாளுமன்றத்தின் பாதுகாப்பில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக டிசம்பர் 12, 2023 அன்று பார்வையாளர்களின் கேலரிமாடத்தில் இருந்து இரண்டு பேர் குதித்த சம்பவமும் நடந்தது.

### 2019இல் எத்தனை கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டது?

முன்னதாக, 17வது மக்களவை அமைப்பதற்கான வாக்குப்பதிவு இந்தியாவில் ஏப்ரல் 11, 2019 முதல் மே 19, 2019 வரை ஏழு கட்டங்களாக நடைபெற்றது. அந்தத் தேர்தலில், உத்தர பிரதேசம், மேற்கு வங்கம், பிகார்

(16ம் பக்கம் பார்க்க)

# இந்தியா: 2024 பொதுத் தேர்தல்:...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய மூன்று பெரிய மாநிலங்களிலும் ஏழு கட்டங்களாக வாக்குப்பதிவு நடத்தப்பட்டது.

2019 தேர்தல் முடிவுகள் மே 23 அன்று அறிவிக்கப்பட்டன, இதில் நரேந்திர மோதி தலைமையிலான என்டிஏ கூட்டணி மொத்தம் 353 இடங்களில் வெற்றி பெற்றது.

பாரதிய ஜனதா கட்சி மட்டும் 303 இடங்களில் வெற்றி பெற்றது. காங்கிரஸ் கட்சிக்கு 52 இடங்கள் கிடைத்தன. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி 92 இடங்களை கைப்பற்றியது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 83வது பிரிவின்படி, மக்களவை தேர்தல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும்.

அரசமைப்புச் சட்டத்தின்படி, அதிகபட்ச மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 552 ஆக இருக்கலாம். தற்போது மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 545. இதில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 543 இடங்களுக்கு பொதுத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

இதைத் தவிர்த்து, மக்களவையில் ஆங்கிலோ-இந்திய சமுதாய மக்களின் பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லை என்று குடியரசுத் தலைவர் கருதினால், அவர் இரண்டு பேரை பரிந்துரைக்கலாம்.

மொத்த தொகுதிகளில் 131 மக்களவைத் தொகுதிகள் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த 131 இடங்களில் 84 இடங்கள் பட்டியல் சாதியினருக்கும், 47 இடங்கள் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதாவது, பட்டியல் சாதி மற்றும் பழங்குடியினர் மட்டுமே இந்தத் தொகுதிகளில் தேர்தலில் போட்டியிட முடியும்.

### எந்த கட்சி ஆட்சி அமைக்க முடியும்?

பெரும்பான்மைக்கு எந்த கட்சிக்கும் குறைந்தது 272 இடங்கள் தேவை. பெரும்பான்மைக்கு சில இடங்கள் குறைந்தாலும் மற்ற கட்சிகளுடன் கூட்டணி அமைத்து ஆட்சி அமைக்கலாம். அரசியல் கட்சிகளின் கூட்டணி தேர்தலுக்கு முன்பும், முடிவுகளுக்குப் பிறகும்கூட நடக்கலாம்.

மக்களவையில் எதிர்க்கட்சி என்ற அந்தஸ்த்தைப் பெற, எதிர்க்கட்சி மொத்த இடங்களின் எண்ணிக்கையில் 10 சதவீதம் அதாவது 55 இடங்களைக்



கொண்டிருக்க வேண்டும். 2014 பொதுத் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் 44 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. 2019இல் கூட காங்கிரசால் 55 இடங்களை பெற முடியவில்லை.

### வேட்பாளர்களை அறிவித்த தேசிய கட்சிகள்

இந்த மாதத்தின் தொடக்கத்தில் இருந்தே தேசியக் கட்சிகள் தங்களது வேட்பாளர்களை அறிவித்து வருகின்றன. ஆளும் கட்சியான பாஜக, 195 வேட்பாளர்கள் அடங்கிய முதல்கட்ட பட்டியலை மார்ச் 2ஆம் தேதி வெளியிட்டது.

அதில் பிரதமர் மோதி மீண்டும் வாரணாசி தொகுதியில் போட்டியிட உள்ளதாக அறிவிக்கப்பட்டது. அவர் மூன்றாவது முறையாக வாரணாசி தொகுதியில் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குஜராத்தின் காந்தி நகர் தொகுதியில் போட்டியிடுவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மார்ச் 13ஆம் தேதி பாஜக சார்பில் 72 தொகுதிகளுக்கான 2ஆம் கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் மத்திய அமைச்சர்களான நிதின் கட்கரி மற்றும் பியூஷ் கோயல் ஆகியோர் மகாராஷ்டிராவின் நாக்பூரிலும், மும்பையின் வடக்கு தொகுதியிலும் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இந்திய தேசிய காங்கிரசின் முதல் கட்ட வேட்பாளர் பட்டியல் மார்ச் 8ஆம் தேதி வெளியிடப்பட்டது. தெலங்கானா, கர்நாடகா, கேரளா, சத்தீஸ்கர், மேகாலயா, நாகலாந்து, சிக்கிம் ஆகிய மாநிலங்களின் 39 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது.

### வயநாட்டில் மீண்டும் போட்டியிடும் ராகுல் காந்தி

அதில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கேரளாவின் வயநாடு தொகுதியில் இருந்து மீண்டும் போட்டியிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவை தேர்தலிலும் வயநாடு தொகுதியில்தான் போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் மத்திய அமைச்சர் சசிதரூர் கேராளாவின் திருவனந்தபுரத்திலும், அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் ஆலப்புழா தொகுதியிலும் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து 43 மக்களவைத் தொகுதிகளுக்கான 2வது வேட்பாளர் பட்டியலை மார்ச் 15 வெளியிட்டது காங்கிரஸ். கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் உள்ளிட்டோர் பட்டியலை வெளியிட்டனர்.

### தமிழ்நாட்டில் நிலவரம் என்ன

தமிழ்நாட்டில் திமுக, அதிமுக, பாஜக ஆகிய கட்சிகள் பிற கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்திக்கின்றன. நாம் தமிழர் கட்சி இந்த மக்களவைத் தேர்தலில் தனித்து போட்டியிடுகிறது.

அதிமுக மற்றும் பாஜகவில் கூட்டணி பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு தமிழ்நாட்டில் 9 தொகுதிகளும், புதுச்சேரியில் ஒரு தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு சிதம்பரம், விழுப்புரம் ஆகிய இரண்டு தொகுதிகளும், மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா 2 தொகுதிகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சிக்கு ராமநாதபுரம் தொகுதி, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சிக்கு ஒரு தொகுதி, மதிமுகவுக்கு ஒரு தொகுதி என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




